பிள்ளைத் திரட்டு மூலம்

ஸ்ரீலை உண்டு

R34
N34
171634

வெளியீடு 16.

OFFICE OF THE REGISTRAR'S ...
23 OCT 1934
MADRAS

# மரணத்திற்குப் பிறகு ஜீவன் உண்டா?

மொழிபெயர்ப்பு.

வெளியிடுவோர்:

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட்,

ஈரோடு.

1934.

R34
N34,
171634

171634
271
181.43

உண்மை விளக்கம் பிரஸ்,
ஈரோடு.

R34

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 OCT 1954
MADRAS

# மரணத்திற்குப் பிறகு ஜீவன் உண்டா?

—:0:—

உலகில் மதம் என்பது உற்பவித்தது முதற்கொண்டு, மனிதனுடைய உள்ளத்தில் "மரணத்திற்குப் பிறகு ஏதாவது ஓர் வாழ்க்கை உண்டா"? என்ற ஓர் கேள்வி உதித்துக்கொண்டே வந்திருக்கின்றது. பிறந்தது முதல் சுடுகாடு செல்லும் வரையிலும் நாம் ஜீவித்துக்கொண்டிருக்கின்றோமே அந்தக் காலமாகிய ஒரு சில வருஷங்கள் தானா நமக்கு அளிக்கப்பட்ட ஜீவியகாலம்? அல்லது மரணத்தின் பயனாக மரணத்துக்குப்பிறகு எப்பொழுதும் அழியாததும், சாஸ்வதமுமான ஓர் வாழ்க்கையில் நாம் பிரவேசிக்கின்றோமா? நாம் அறிய அநேக ஆண்டுகள் வந்தும் விட்டன; அநேக ஆண்டுகள் கழிந்தும் விட்டன; எண்ணிக்கையற்ற நமது மூதாதையர்கள் மாண்டு மண்ணோடு மண்ணாய் மறைந்தும் இருக்கிறார்கள். அவ்வாறிருந்தும் கூட, மனிதவர்க்கமானது "மரண மடைந்த மனிதன் மீண்டும் ஜீவிக்கின்றானா"? என்ற கேள்வியை மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டே வந்திருக்கின்றது. மதங்கள் இக்கேள்விக்குப் பல்வேறு விதமாய் ஆசைமொழிகளால் நமக்கு விடையளிக்க முயற்சிக்கின்றது. ஆனால், இத்தகைய ஆசைமொழி விடைகளால் நாம் திருப்தியடைந்துவிட முடியாது. வேதாந்த சாஸ்திரமோ, உபயோகமற்ற சில உறுதிமொழிகளை உரைக்கின்றது. ஆனால், இவற்றால் எல்லாம் சுடுகாட்டில் புதைக்கப்பட்ட பிணங்களுக்கு யாதொரு நன்மையும் உண்டாகியதாக புலப்படவே இல்லை. சென்ற

271
181·43



பல நூற்றுண்டுகளாக, உலகில்உள்ள எல்லாப்பிரேதக்குழிக ளும், விக்கிரகங்கள் மாதிரி மௌனம் சாதித்துக்கொண்டே வந் திருக்கின்றன. நமது மூதாதையர்கள், காட்டுமிராண்டிகளாய் வாழ்க்கை நடத்திய பொழுது, உயிரற்று—சவமாய்க்கிடக் கும் [இறந்துபோன] தங்கள் குழந்தைகளை, தூக்கி, மடிமீதிருத்தி, அக்குழந்தைகளின் மாரா முகத்தில் முத்தமிட்டு, முத்தமிட்டு, ஒப்பாரி வைத்து அழுது, மரண த்தின் மருமங்களை உணராது, துக்கித்த அன்று, மறு ஜன்மத் தைப் பற்றி அவர்களுக்கு எவ்வளவு தெரியுமோ, அவ்வளவு தான், தற்காலம் வசித்து வரும் மனிதர்களுக்கு (இன்றும்) தெரிய வருமே யல்லாது, அதற்கு மேல் ஒன்றும் தெரிந்த தாக நினைப்பதற்கில்லை. இவ்வுலகில் தனது ஆசைக்காத லியைப் பறி கொடுத்து, அவளைமீண்டும் ஓர் சமயம் அடுத்த உலகில் சந்திப்போமோ, அல்லது மாட்டோமோ எனச் சந் தேகப்படும் ஓர் அடிமைக்கு மறு ஜனனத்தைப்பற்றி எவ்வ ளவு தெரியுமோ அவ்வளவு தான் மற்றவர்களுக்கும்தெரியுமே யல்லாது, அதிகமாக எதும் தெரிந்திருப்பதாகச் சொல்வதற் கில்லை. நதிகள் எப்பொழுதும் ஓடிக்கொண்டிருந்து, கடை சியாக, அவைகள் எவ்வாறு சமுத்திரத்தில் கலந்து மறைந்து விடுகின்றதோ, அவ்வாறே தான் ஒரு சில உண்மையான மனிதர்கள், "மக்கள் மரணமடைந்த பிறகு, மறு ஜனனத் தில்—அதாவது மேல் உலகில் அவர்கள் எத்தகைய வாழ்க் கையை நடாத்துகின்றார்கள்" என்பதை ஆராய்ச்சி செய்து, ஆராய்ச்சிசெய்து, பல நூற்றுண்டுகளைக்கழித்து, காலச்சக் கிரத்தால் மண்ணோடு மண்ணாக மறைந்து போனார்கள். பார் த்துப் பார்த்து சலிப்பும், களைப்புமடைந்த, "முனி"வர்களு டையவும், "ரிஷி"களுடையவும் கண்கள் மீண்டும், மீண்டும் அந்தகாரத்தையே நோக்கின; அவர்களுடைய நம்பிக்கை

யானது அவர்களுடனேயே மறைந்து விட்டது; பிரேதக் குழிகளைச் சுற்றிலுமிருக்கப் பட்ட படுதாத்துணியானது இன்னும் நீக்கப்படவே இல்லை; இவ்வுலக வாழ்க்கையிலிருந்து நீங்கியபின்—அதாவது செத்தபின், அடுத்த உலகில் எல்லாவித போக, போக்கியங்களையும், இன்பங்களையும் நாம் அனுபவித்து, இன்புறுவோ மென்பதாகவாவது, அல்லது மரண மடைந்தவர்கள் எத்தகைய வாழ்க்கையைத்தான் நடாத்துகின்றார்களென்பதைப்பற்றியாவது மரண வாயிலையடைந்தவர்களில் ஒருவராவது எடுத்துரைத்ததாக யாதொரு வித தகவலும் நமக்கு நாளதுவரை கிடைக்கவே இல்லை.

மரணத்திற்குப்பிறகு, ஓர் வாழ்க்கை மக்களுக்கு, உண்மையாகவே இருக்குமானால், அந்த வாழ்க்கையை அறிந்து கொள்ளுவதற்காக மக்கள், பல நூற்றாண்டுகளாக, முயற்சித்து வந்தும் ஏன் பயன்படவில்லை? மக்களுக்குப் புலப்பட்டதாகச்சொல்லப்படும் எல்லா உண்மைகளிலும், இதைப்போல் தந்திரமாக விலகிக்கொண்டது வேறு ஏதாகிலும் ஒன்று உண்டா? நாம் எல்லா விஷயங்களையும் பரிசீலனை செய்து, அவைகளின் மூலம் நமது முன்னேற்றத்திற்கவசியமான உண்மைகளை அறிந்து, நமது அறிவை விசாலப் படுத்திக்கொள்ளுகின்றோம். அதன் பயனாய் எவ்வளவோ அற்புதங்களையும், புதுமைகளையும் கண்டுபிடித்து விட்டோம். ஆனால், இந்த ஒரு விஷயத்தில் மட்டும், நாம் அதனுடைய இரகசியத்தை அறிந்துகொள்ள முடியவில்லை, அது ஏன்? மரணமடைந்த மக்கள் மறு ஜன்மத்தில் மேல் உலகில், எத்தகைய வாழ்க்கையைத்தான் நடாத்துகின்றார்கள் என்பதைப்பற்றி பல ஆயிர வருடங்களாக ஆராய்ச்சி செய்தவர்களின் முயற்சியானது, யாதொரு பலனையுமளியாது, வீண் ஆனதிலிருந்தாவது, மரணத்திற்குப் பிறகு நாம் மீண்டும் வாழ்க்கை நடாத்து

வோமென்னும் எண்ணமானது ஆதாரமற்றதென்றுவது, அல்லது அத்தகைய எண்ணம் ஓர் கற்பனை—பகற்கனவு தான் என்பதாகவாவது நாம், ஏன் எடுத்துக் கொள்ளவோ, அல்லது அறிந்து கொள்ளவோ முடியவில்லை?

மரணத்திற்குப்பிறகு மறுஜனனமோ, அல்லது மேல் உலக வாழ்க்கையோ ஆகிய ஒன்று உண்டு என்கின்ற நம்பிக்கையானது, மக்களுடைய மனதில் ஆழமாகப்பதிந்து போயிருக்கின்ற படியால் ஆராய்ச்சியாளர்களின் மனதில் அதன் உண்மையைப்பற்றிய ஓர் பெரிய சந்தேகமாவது இருக்கத்தான் செய்யும். மக்களின் அறிவு, நாளுக்கு நாள் விருத்தியாகியும், விசாலமாகியும், முன்னேறிக்கொண்டுவருவதால் தற்கால அறிவியல் உலகில் அந்தச் சந்தேகமானது, ஊர்ஜிதமாகிவிட்டது. பிரேத அலங்காரத்துணியை எத்தகைய வெளிச்சமும் நாளதுவரை ஊடுருவிப் பாயாததாலும், பிரேதக்குழிக்கப்பால் ஜீவன், ஜீவித்திருக்கின்றதென்பதைக்குறித்து நாம் திடமாக நம்புவதற்குப் போதிய ஆதாரங்கள் நமக்கு ஒன்றினுலும் அளிக்கப்படவில்லை யாதலாலும், இலட்சக்கணக்கான மக்கள்— சிறந்த அறிவியல் வாதிகளும், ஆராய்ச்சியாளர்களும் கூட— மரணம் என்பது எல்லாருக்கும் எவ்வாறு காணப்படுகின்றதோ அவ்வாறேதான், அதாவது இயற்கை நம்மை ஏமாற்றமடையும்படி செய்யவில்லை என்பதாகத்தான் அதாவது பிராணன் பிரேதக்குழியுடனே நின்று விடுகின்றதென்பதாகத்தான் அறிந்திருக்கின்றார்கள். மரணத்திற்குப் பிறகு நாம் மீண்டும் உயிர் பெற்று, ஜீவித்துக்கொண்டுதான் வருகின்றோம் என்னும் உண்மையை நாம் அறிந்து கொள்ளுவதினின்றும் தடுக்கப்படுவதற்கு, ஏதோ ஓர் அறிவுள்ள சித்தாந்தந்தான் காரணமாகும் எனக்கூறப்படும் கொள்கையால் மட்டும்-தத்துவத்தால்மட்டும்—சிந்தனை சக்தி

வாய்ந்த, அறிவுள்ள மானிடர்களின் மனது திருப்தியடைந்துவிட முடியாது. இயற்கையின் சக்தியை நாம் அறிந்திருக்கும் வரையிலும், அல்லது இயற்கையின் வல்லமையை நாம் யூகித்து, அறிந்து கொள்ளக்கூடிய அறிவும், ஆற்றலும் நமக்கு இருக்கும் வரையிலும் இம்மாதிரியான ஓர் ஆதாரமற்ற கர்ப்பித தத்துவத்தில் நாம் நம்பிக்கைகொண்டிருப்பதானது நியாயமேயாகாது. வாழ்க்கையின் ஜீவிதசரித்திரத்தை நாம் அறிந்திருப்பதனுல், மாணத்திற்குப் பிறகு நாம் மீண்டும் உயிர்பெற்று, வாழ்க்கை நடாத்துகின்றேம் என்னும் தத்துவத்தின் உண்மையில் ஒரு சில பாகத்தையாவது நாம் தெளிவாகவும், ஸ்பஷ்டமாகவும் அறிந்து தானிருக்க வேண்டும் என்னும் முடிவுக்குத்தான் நம்முடைய அறிவு நம்மைக்கடைசியாக வற்புறுத்த வேண்டும், அல்லது அதே உண்மைகள், மேல் உலகவாழ்க்கையெனக்கூறப்படுவது ஓர் ஆசையான மயக்கத்தைத்தவிர வேறல்ல என்னும் முடிவுக்குத்தான் நம்மை இழுத்துச் செல்லும். இது தான் நியாயமுமாகும்.

நம்மை அடுத்திருப்பவர்களாலும், தப்பெண்ணங்களாலும், மதிமோசங்களாலும் உண்டாக்கப்பட்ட கோவில்களாலும், அல்லது பல் வேறு மதங்களாலும்—ஜாதிகளாலும், இந்தக் கேள்விக்கு—மரணத்திற்குப் பிறகு ஜீவன் நாசமோ, அல்லது அழிவோ அடைந்து விடாமல், சாஸ்வதமாக நீடித்தும், உயிருடனும் வாழ்ந்துகொண்டுதான் வருகின்றதென்னும் சித்தாந்தத்திற்கு—மனித வர்க்கத்திற்காக வேண்டி ஒழுங்குபடுத்தவோ, அல்லது தீர்ப்புக் கூறி விடவோ முடியாது. உண்மையையே, தனது பிரதானமான கொள்கைஎனக் கொண்டிருக்கும் ஒரு நியாய ஸ்தலத்தில் தான், இந்தச்சித்தாந்தம் ஒழுங்குபடுத்தவோ, அல்லது தீர்ப்புக்கூறப்படவோ வேண

டும். மரணத்திற்குப் பிறகு ஒரு வாழ்க்கை உண்டு என்றோ, அல்லது இல்லை என்றோ நிர்ணயிக்கப்படவேண்டுமானால்— அவசியம் நிர்ணயிக்கப்படவே வேண்டுமென நாம் விரும்பினால்—அது விஞ்ஞான சாஸ்திர மூலந்தான் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

விஞ்ஞான சாஸ்திரம், மனோராச்சியங்களைப் பற்றியோ அல்லது மனோ பாவங்களைப்பற்றியோ போதிப்பதுமில்லை— அவைகளைப்பற்றிக்கவலைப்படுவதுமில்லை. ஆனால் அது உண்மையும், எதார்த்தமுமான செய்திகளையே போதிக்கின்றது. மற்றபடி அது ஒருநாளும் உண்மையை சிருஷ்டிப்பதுமில்லை—மாற்றுவதுமில்லை; அது, சாதாரணமாக உள்ளதை, உள்ளபடியே எடுத்துரைக்கின்றது. மேலும் அது, விஷயங்களை—உண்மையாகவே இருக்கும்படியான விஷயங்களை— அறிந்து கொள்ள போராடிக்கொண்டும், பிரயாசைப்பட்டுக் கொண்டும் வருவதுடன், தற்போது நிலைத்திருக்கக்கூடிய விஷயங்களிலிருந்து—உண்மைகளிலிருந்து—உண்டாகும் படியான நிலைமையையும், மாறுபாட்டையும், அது போதிக்கின்றது.

விஞ்ஞான சாஸ்திரம், காரண, காரியங்களைக்கொண்டு, இயற்கையை வியாக்யானம் செய்து, பெயரிடுகின்றது. காரணமில்லாது ஓர் காரியம் நடைபெற்றதாக, அதற்குத் தெரியவே தெரியாது—காரியமின்றி ஓர் காரணமிருப்பதாகவும் அதற்குத் தெரியாது. எதையும் அது மனோபாவனை செய்து கொள்ளவோ, அல்லது தொடர்ச்சியாயிருக்கக்கூடிய விஷயங்களின் இடையில் ஏதாகிலுமொரு தடையை அங்கீகரித்துக் கொள்ளவோ, அதனால் முடியாது. போதிய காரணங்களின்றியும், தக்க சான்றுகளில்லாமலும் காணப்படும்

விஷயங்கள் யாவும் அற்புதங்களென்றே—தேவாதீன சம்பவங்களென்றே சொல்லப் படுவதாகும். அத்தகைய அற்புத சம்பவங்களேயோ, அல்லது புதுமைகளேயோ, தேவாதீனங்களேயோ நாம் ஒத்துக்கொள்ளுவதாகவோ, அல்லது அங்கீகரிப்பதாகவோ யிருக்குமானல், நியாய சாஸ்திரங்களேயோ, பிரமாணங்களேயோ அல்லது ஒழுக்கங்களேயோ நாம் மறுத்தவர்களேயாவோம். ஏனெனில், இந்த உலகமானது ஒழுங்குகளாலும், கட்டுப்பாடுகளாலும், பிரமாணங்களாலும்தான் ஆளப்பட்டு வருகின்றது.

விஞ்ஞான சாஸ்திரம் வஸ்த்து தத்துவத்திற்குள்பட்ட சடப்பொருளேப்பற்றியும், சக்தியைப்பற்றியும் போதிக்கின்றது. அதற்குப் பேய், பூதங்களேப்பற்றிய விவகாரம் ஒன்றும் தெரியவராது. சடப்பொருளின் எல்லாவிதத் தொழில்களேயும், காரியங்களேயும், சக்தியின் சாட்சியெனவேதான், அது அறிந்திருக்கின்றது. விஞ்ஞான சாஸ்திரத்திற்கு எட்டிய வரையிலும், இப்பரந்த உலகமானது, இந்த இரண்டுவித சடம், சக்தி—பொருள்களால் உண்டாக்கப்பட்டிருப்பதாக ஏற்படுகின்றது. நமது சிரசுகளுக்கு மேல்பளிச் பளிச்சென்று பிரகாசித்துக்கொண்டிருக்கும் நட்சத்திரங்களும், நமது பாதங்களுக்குக் கீழேயுள்ள செழுமை பொருந்திய பூமியும், மகத்தான சமுத்திரங்களின் அலேகளும், வானவில்லின் பல்வேறுவர்ணங்களின் அலங்காரக்காட்சியும், மற்றும்உயிருடன் வாழக்கூடிய எல்லா விதப்பொருள்களும், அதாவது அழகிய பூக்களேப் பூக்கும் மிருதுவான மெல்லியகொடியிலிருந்து புயற்காற்றை எதிர்த்து, நிற்கக்கூடிய பிர்மாண்டமான விருக்ஷம் வரையிலும், ஆகாயத்தைத் தனது பாடல்களால் துளேக்கக் கூடியவானம்பாடிக் குருவியிலிருந்து ஸ்பரிசத்தினலேயேதன்னுடையஅன்பையும், ஆவலேயும் விளங்க வைத்தும், புன்முறு

வல்பூத்த முகத்தையுமுடையதாய்மார் வரையிலும், விஞ்ஞானசாஸ்திரத்தால் கண்டு, அறியப்பட்ட இப்பூமியிலுள்ள மற்றஎல்லாப்பொருள்களும், இந்த இரண்டுவித—சடம், சக்தி ஆகிய—பொருள்களின் கூட்டுறவால் சிருஷ்டிக்கப்பட்டவைகளேயன்றி, வேறில்லை. சாதாரணமாக, ஒரு கல் சடப்பொருள்; அதன் பரமாணுக்களை ஒன்றாகப் பிணைத்திருக்கக் கூடியது சக்தி. நமது தசை சடப்பொருள்; அதை ஒன்றாக அடக்கிக்கொண்டிருப்பது சக்தியின் தொழில். இரைப்பை சடப்பொருளின் ஓர் அடுக்கு. அதில் நடைபெறும் தொழிலாகிய ஜீரணம் என்பது சக்தியால் நடைபெறுகின்றது. மிக நுட்பமான சடப்பொருளின் கூட்டுறவால் உண்டாக்கப்பட்டது மூளை, அதனுடைய, வேலையாகிய, நினைவு, எண்ணம், சிந்தனை ஆகியவைகள் யாவும் உருவாக்கப்பட்டஓர் சக்தியேயாகும்.

இப்பொழுது, சடப்பொருளும், சக்தியும் வெவ்வேறாகவும், தனித்தனியாகவும், பிரிந்திருக்க முடியாது. சடப்பொருளுடன் கலவாத சக்தி இருக்கவே முடியாது—சக்தியுடன் கலவாத சடப் பொருளும் இருக்கவே முடியாது. எந்த இடத்தில் ஒன்று காணப்படுகின்றதோ, அதே இடத்தில் மற்றொன்றும் அவசியமிருந்தேதான் தீரவேண்டும். ஒன்று மட்டும் தனித்திருப்பதாக நினைப்பதானது அசம்பாவிதமேயாகும்.

விசாரணையின் மூலமாகவும், ஆராய்ச்சியின்மூலமாகவும் தெரிந்தவைகளிலிருந்து தெரியாதவைகளைக்கண்டு, அறிந்து கொள்வதனால்தான் நமது அறிவும், கல்வியும்விசாலமடைகின்றது அம்மாதிரியாகவே, மேல் உலக வாழ்க்கை—அதாவது அடுத்த ஜன்மத்திய வாழ்க்கையைப்பற்றி நாம் சிந்திப்பதற்கு

முன் இவ்வுலக வாழ்க்கையின் தத்துவத்தைப்பற்றி நாம் அறிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் மீண்டும் நாம் உயிருடன் இருக்கவேண்டுமானால், அந்த வாழ்க்கையானது இப்பொழுது நாம் அனுபவித்துவரும் வாழ்க்கையின் தொடர்ச்சியாகவேதான் எப்படி யாவதிருக்க முடியும்.

ஆகவே இவற்றிலிருந்து மரணத்திற்குப்பிறகு, மனிதன் மீண்டும் உயிர்பெற்றெழுந்திருக்கின்றான் என்னும் தத்துவத்தை, விஞ்ஞான சாஸ்திரம் அடியோடு மறுக்கின்றதென்பதை, இங்கு எடுத்துக்காட்டவேண்டிய அவசியமே இல்லை.

நமது தேகம் என்று கூறப்பட்ட இந்த அங்கமானது, சடப்பொருள்களால் ஆக்கப்பெற்று, அதற்கு உள்ளும், அதைக்கொண்டும், அதனாலும் நாம் ஜீவித்துவரும்படியான இந்த உடலானது நிலையற்ற பொருள்களால் ஒழுங்குபடுத்தப்பட்டதே யாகும். அன்றியும், இது கழிந்துபோகக்கூடியது மாகும். இந்தப்பூமியைக் கூட்டுவதற்கு ஆதாரமான மூலவஸ்துக்கள் எவையோ, நீரும், காற்றும் அதே மூலவஸ்துக்களால்தான் நமது தேகங்களும் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. நாம் ஒவ்வொருவரும் உப்புவாயு, பிராண வாயு, ஜலவாயு, கரியமல வாயு, நிபாக்கினி (Phos phorus) இரும்பு, பொட்டேசியம், கந்தகம் ஆகியவைகளாலும், இன்னும் இதர தாதுக்களாலும் கலந்திருக்கப்பட்ட, எண்ணிறந்த இலட்சக் கணக்கானபரமாணுக்களால் உருவாக்கப்பட்டவர்களாவோம். நமது மொத்த எடையில், நூற்றுக்கு சுமார் எழுபதுபாகம் வெறுந் தண்ணீரேதான். நாம் எந்தப்பரமாணுக்களால் உருவாக்கப்பட்டிருக்கின்றோமோ, அவைகள் யாவும் அடிக்கடி நாசமாக்கப்பட்டு, மீண்டும், மீண்டும் புதுப்பிக்கப்படுகின்றன. பொதுவாகக்கூறுமிடத்து, யுத்தத்தில் மடிந்துபோன

போர்வீரர்களுக்குப் பதிலாக எப்படிப் புதிய யுத்தவீரர்கள் அனுப்பப்படுகின்ருர்களோ அவ்வாறே நமது ஜீவியத்தின் காரணமாய் ஏற்பட்ட போராட்டத்தில் மடிந்துபோன பரமாணுக்களுக்குப் பதிலாக, புதிய பரமாணுக்களடங்கிய பட்டாளங்கள் இரத்த ஓட்டத்தில் கலந்து, நமது தேகங்களுக்குப் போதிய ஊக்கத்தையும் உணர்சியையும், பலத்தையும் அளித்து சதா நம்மை பயமுறுத்திக்கொண்டும் நமது அனுமதியில்லாமல் உள்ளே பிரவேசிக்க எத்தனிக்கின்றவனை —மரணத்தை—உள்ளே பிரவேசியாதிருக்கச்செய்ய ஓர் அரணாகவும்—கோட்டையாகவும்— இருந்து ஊழியஞ்செய்கின்றன.

நமது உடல்களில் இவ்வாறு ஓய்வு, ஒழிவின்றியும், தொடர்ச்சியாகவும் நடைபெற்றுவரும் தொழில்களை — அதாவது அணுக்கள் நாசமாக்கப் பட்டும், மீண்டும் புதுப்பிக்கப் பட்டும் வருவதை விபரமாக உரைக்க வேண்டுமானல், நமது ஜீவியத்தில் நாம் ஒவ்வொரு நிமிடமும் இறந்தும், மீண்டும் உயிர்பெற்றும் வருகின்ருேமெனவும்தான் கூறவேண்டும்.

நாம் வயோதிக திசையை யடைந்ததும், நமது உடல்களிலுள்ள அணுக்களின் சக்தி குறைந்து, இரத்த ஓட்டத்தில் நிர்மூலமாக்கப்பட்ட அணுக்களைப் புதுப்பித்து, அவைகளை வேண்டிய அளவு சமமாக்கிக்கொள்ளும் தன்மையை—சக்தியை இழந்து விடுகின்றது. இத்தகைய தகுதியற்றதும், சாமர்த்தியமற்றதுமான நிலைமையை அடைந்த பொழுதுதான் மரணம் சம்பவிக்கின்றது.

மூல வஸ்துவாகிய சாதாரண மண்ணல் நாம் உருவாக்கப்பட்டிருப்பதிலிருந்தும், சுவாசத்தை உள்ளே இழுக்கக்

கூடிய ஒவ்வொரு நிமிட நேரத்திலும் நாம் நாசமாக்கப்பட்டும், புதுப்பிக்கப்பட்டும் வருவதிலிருந்தும், எந்த மண்ணுல் நாம் உருவாக்கப்பட்டோமோ, அதே மண்ணோடு மண்ணுக நமது உடல்கள், கடைசியாக ஒன்று சேர்க்கப்படுவதிலிருந்தும், நமது இந்த சடப்பொருள்களால் ஆக்கப்பட்ட உடல்கள் யாவும் இயற்கையை நோக்கித் திரும்பும் காலத்தில், தங்களுடைய தாதுக்களை—மூலவஸ்துக்களை—பூமியுடனும், ஆகாயத்துடனும் கரைத்து, கலந்து விடுகின்றதென்பதை நாம் சுலபமாகவே அறிந்துகொள்ளுகின்ரும். இதைவிட இன்னும் அதிகமாகவும் அறிந்துமிருக்கின்ரும்; இலகுவாயுடைந்து போகக்கூடியஇந்த நமது சரீரங்கள் எந்த அணுக்களால் உருவாக்கப்பட்டனவோ அந்த அணுக்கள் யாவும், உலகவாழ்க்கையிலிருந்து நாம் மறைந்த பிறகு, இயற்கையின் டற்பல தன்மைகளிலிருந்து மீண்டும், மீண்டும் தோன்றுகின்றது. அவைகள் புல், பூண்டுகளிலும், மலர்ந்த ரோஜாப்புஸ்பங்களிலிருந்து அசைந்தாடிக்கொண்டிருக்கும் கம்பீரமான மரங்கள் வரையில் காணப்படுவதையும்; ஓடுகின்ற நதிகளில் பாய்ந்து கொண்டிருப்பதையும், பூக்களின் இதழ்களில் பிரகாசித்துக்கொண்டிருக்கக்கூடிய பனித்துளிகளாக விளங்கிக்கொண்டிருப்பதையும், சூரியனுல் முத்தம் இடப்பட்ட காற்ருல் அநேக தேசங்களுக்கும், கடல்களுக்கும் அடித்துக்கொண்டு போகப்பட்டுமிருப்பதையும்; எண்ணிக்கையற்ற மிருக உருவங்களில் அவைகள் மீண்டும் காணப்படுவதையும், காலச்சக்கரம் சுழல, சுழல நமக்குப்பின்தோன்றக்கூடிய நமது சந்ததிகளின் உருவங்களை உண்டாக்குவதற்கு உபயோகப்படக் கூடியவைகள் என்பதையும் அறிந்தேயிருக்கின்ரும்.

இயற்கையில் ஒன்றும் அழிந்துபோவதில்லை. ஒரே சடப்பொருள் மீண்டும், மீண்டும், திரும்பவும்—திரும்பவும் உட

யோகப்படுத்தப்படுகின்றது. பேதை என்றோ, அறிவில்லாதவன் என்றோ அல்லது ஒன்றுக்குமே உதவாதவன் என்றோ கருதப்படக்கூடிய ஒருவனுடைய இரத்த ஓட்டத்தில் இன்று கலந்திருக்கக்கூடிய அந்த இரும்புச்சத்தானது, அடுத்த தலைமுறையில் ஓர் வீரனின—பராக்கிரமமுள்ள வனின் புஜத்திலிருந்தாலுமிருக்கலாம், அல்லது ஓர் தத்துவ சாஸ்திரியின் கருத்துக்களையும், எண்ணங்களையும், சிந்தனையையும் செழிப்பித்து, அலங்கரித்தாலும் அலங்கரிக்கலாம்.

இயற்கையானது சடப்பொருளின் ஒரு பரமாணுவையேனும் வீணுக்காமல், புதியவைகளை சிருஷ்டிப்பதில் பழையவைகளையே மீண்டும், மீண்டும் உபயோகித்து, மரத்தையும், மிருகத்தையும், மனிதனையும் ஒரே வித சடப்பொருளால் உருவாக்கு வதிலிருந்து, அநேக காடுகள் உண்டாவதற்கும், எண்ணிக்கையற்ற மிருகங்களும், கணக்கற்ற சந்ததிகளையுடைய மனிதர்களும் உண்டாவதற்கும் மூலகாரணமாக எவை இருந்தனவோ அதே மூலகாரணமான தாதுக்களை, நாமும் நமது உடல்களில் தாங்கிக்கொண்டிருக்கின்றோம் என்னும் உண்மையில் சந்தேகமிருக்கவேண்டிய பிரமேயமே இல்லை. ஒரு மனிதன், தன்னுடைய உடலைத் தாங்கிக்கொண்டிருப்பதில் கூட, அவன் தன்னந்தனியனாய், தானாகவே ஜீவித்திருப்பதில்லை. நாம, நமது மூதாதையர்களின் உடல்களையேதான் தாங்கிக் கொண்டிருக்கின்றோமெனவும், நம்முடையதென இப்பொழுது நமக்குப் புலப்படும் இநதத் தசையானது, இன்னும் பிறக்காமலிருக்கப்பட்ட நமது சந்ததியார்களின் எலும்புகளை அலங்கரிக்குமெனவும்தான் நாம், பொதுவாகவே, உரைக்க வேண்டும். இக்காரணங்களைக் கொண்டேதான், "பிரார்த்தனைப் புஸ்தகங்க"ளில் நம்பிக்கை வைத்து, பயபக்தியுடன் ஜபம் செய்து;

"மனிதன் மரணமெய்தியதும் மீண்டும் உயிர்பெற்று எழுந்திருக்கின்றான்" என்னும் தத்துவத்தை உண்மையென நம்பி வாழும் மாந்தர்கள் யாவரும், வெறுக்கத்தக்க—பயனற்ற ஓர் மூடப்பழக்கத்தை தங்களுடைய மார்போடு அணைத்துக்கொண்டே இருக்கின்றார்களென, விஞ்ஞான சாஸ்திரம் நமக்கு உறுதியாகவும் நிச்சயமாகவும் எடுத்துரைக்கின்றது.

மனிதன் மரணமெய்தியதும், மீண்டும் உயிர்பெற்று ஜீவிக்கின்றான் என்னும் தத்துவத்தை நினைத்தற்கரிய ஓர் செய்கையாகுமெனவும், அசாத்தியமான ஓர் காரியமாகுமெனவுமேதான், இயற்கையின் உண்மைகள்—கருமங்கள் வெளிப்படுத்துகின்றன.

ஆனால், இப்பொழுது நமது இந்த உடலின் மூலப்பொருள்கள் யாவும் மண்ணுடன் கலந்து, தூசியாக மாறி, ஆகாயத்தில் அடித்துகொண்டு போகப்பட்டும், சலசலவென ஓடும் ஆறுகளில் கலந்தும், படிப்படியாய் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் மனித வர்க்கத்திலிருந்து புல், பூண்டு வரையிலும் பிரவேசித்து, அவைகளை சிருஷ்டிப்பதாக யிருக்குமேயானால், அப்பொழுது நமது எந்தப் பாகம் மீண்டும் உயிர்பெற்று, ஜீவித்திருக்க வேண்டுமென விதிக்கப்பட்டிருக்கின்றது? நமது இந்த உடல் பின்னால் தங்கி, நின்று விடுவதைப்பார்த்திருந்தும் கூட, இயற்கை அதைச் சங்கரிக்கத் தீர்ப்புக்கூறியிருப்பதை அறிந்திருந்தும் கூட, மறுஉலகில்—அடுத்த ஜன்மத்தில் நம்பிக்கை கொண்டுள்ள பல்லாயிரமக்கள் மனது அல்லது ஆத்மாவானது மேல் உலகில் உடலற்று, ஜீவித்துக்கொண்டு தானிருக்கின்றதென்னும் எண்ணத்துடனேயே திருப்தியடைந்து விடுகின்றார்கள். ஆனால், இத்தகைய ஓர் ஜீவியம்—வாழ்க்கை சாத்தியமா

குமா? மனதிற்குக் காரணமாயுள்ள மனிதன் மரித்தபிறகு, மனது மட்டும் ஜிவித்திருக்க முடியுமா? மரணத்திற்குப்பிறகு மனிதன் மீண்டும் உயிர் பெற்று, ஜீவித்திருப்பதைக் குறித்து எத்தகைய முடிவுக்கு நாம் முன்னால் வந்தோமோ, அதே உண்மையானதும், திடமானதுமான வர்த்தமானங்களைக் கொண்டே, இந்தக் கேள்விக்கும் நாம் முடிவான பதில் உரைக்கலாம். மனது மூளையுடன் சம்மந்தப்பட்டிருப்பதைத் தவிர்த்து, நமக்கு அதிகமாக ஒன்றும் தெரியவில்லை. ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் மனதின் முயற்சியே தான் மூளை வேலை செய்ய முயற்சிக்கின்றதென்பதை அறிவிக்கின்றது. உடற கூற்று சாஸ்திரத்திற்குரிய ஆத்மதத்துவ சாஸ்திரத்தின் விஞ்ஞான சாஸ்திரங்கள் யாவும் மனம் அல்லது மனது எனக்கூறப்பட்டு வருவதானது மூளையின் அதிகப்படியான அல்லது குறைந்த அளவுள்ள வேலை—தொழில் என்பதாகவே தான் அததாட்சியுடன் மெய்ப்பிக்கின்றன. "உணர்ச்சியையும், மூளையில் உண்டாகும் வேறுபாட்டையும் ஒன்றாக இணைத்து, பொருத்துவதற்குறிய பிரமாணங்களும், நியமங்களும் திட்டமானதும், தீர்க்கமானதுமாவதுடன் நுட்பமானதும், சூக்ஷ்மமானதுமாகும். அவைகளால் தவறாமலும், தப்பாமலும் விளைவதை—பலன்களை உபாயமாய் விலக்கவும் முடியாது" என, புரபசர் வில்லியம் கிங்டன் கிலிபோர்டு [Professor William Kingdon Clifford] என்பவர் தமது "உபன்யாசங்களும், வியாக்யானங்களும் [Lectures & Essays] என்னும் நூலில், கூறியிருக்கின்றார். புரபசர் ஹக்ஸ்லி [Professor Huxley] என்பவர், "உண்மையாகவே, தற்காலம், விஷயங்களை அறிந்து, நியாயத்தை எடுத்துரைக்க ஆற்றல் வாய்ந்தவர்கள் யாவரும் ஆத்மதத்துவ சாஸ்திரத்தின் மூலதாது, நரம்புகளுக்குரிய முறைகளையும், ஒழுங்குகளையும், கோட்பாடுகளையும் பற்றி எடுத்துரைக்கும் உடற்கூற்றுசாஸ்திரமேதா

ளுதுமென்பதைப்பற்றி ஒரு பொழுதும் சந்தேகிக்கவே மாட்டார்கள். மனதின் கிரியைகள்—செய்கைகள் என நாம் எவைகளைக் குறிப்பிடுகின்றோமோ அவைகள் யாவும் மூளையின் தொழில்களேயாகும். மனஉணர்ச்சி சம்மந்தமான தளவாடங்கள் யாவும் மூளைக்குரிய செய்கைகளின் பலன்களாகும்" என தமது "ஹீயும் என்பரைப்பற்றிய வியாக்யானம்" (Essay on "Hume") என்னும் புஸ்தகத்தில் உரைத்திருக்கின்றார். "மனோவியாதியில் பொறுப்பு" (Responsibility in Mental Disease) என்னும் நூலை இயற்றிய டாக்டர் மாண்ட்ஸ்லி (Dr. Mandsley) என்பவர், தமது நூலில், "மனம் என்பதை உடற்கூற்று சாஸ்திரப்படி, விளக்கமாக உரைக்க வேண்டுமேயானால், மூளையின் தொழில்கள்—கிருத்தியங்கள் என்பதாகவேதான் பொதுவாகவும், மொத்தமாகவும் உரைக்கவேண்டும். அவைகள் நினைவு, எண்ணம், கருத்து, சிந்தனை, மனக்கருத்து, உணர்ச்சி, ஸ்மரணை, அறிவு, சித்தக்கருத்து, உள்ளம், தீர்மானம் எனப்படும் இவைகளே மூளையின் தொழில்களாகும். மனம் குழப்பமடைந்திருக்கின்றதென்றுவது, அல்லது மனம் கலக்கமடைந்திருக்கின்றதென்றுவது நாம் உரைப்போமேயானால், அப்பொழுது மேலே குறிப்பிடப்பட்ட தொழில்களில் குழப்பமோ, அல்லது கலக்கமோ ஏற்பட்டிருகின்றது என்பதாகவேதான் பொருள்படும்" என, எழுதியிருக்கின்றார். மேலும், புரபசர் ரோமேன்ஸ் (Proffesor Romanes) என்பவர் எழுதியுள்ள "மோனிசம்" (Monism) என்னும் நூலில், மனம் என்பதைப்பற்றி விவரிக்கும்பொழுது, மனம் எனக்கூறப்படுவதானது," "சடப்பொருளின் அசைவு—சலனம் என்பதைத் தவிர்த்து, வேறல்ல" என்பதாகத்தான் குறிப்பிட்டிருக்கின்றார்.

மனம், மூளையையே சார்ந்திருக்கின்றதெனக் கூறப்படுவதானது எவ்வளவு உறுதியானதோ, எவ்வளவு பூரணமானதோ, எவ்வளவு மாறாமலிருக்கக்கூடியதோ, அதேபோல்தான் மனதிற்கும், மூளைக்கும் சம்மந்தமில்லை எனக்கூறப்படுவதானது பகுத்தறிவிற்குச்சிறிதும் பொருத்தமானதல்லஎன்பதுமாகும். எண்ணத்தின் இயல்பும், அதன் தன்மையும், அளவும் மூளையின் இயல்பையும், தன்மையையும் அளவையுமே அடிப்படையாகக் கொண்டு, சார்ந்திருப்பதுடன், அந்த மூளையின் பல்வேறு பாகங்களின் உற்பத்தியையும், தோற்றத்தையும் சார்ந்தும், பொருந்துமிருக்கின்றது. மேலும், அதன் சுருள்களின் எண்ணிக்கையையும், ஆழத்தையும் சார்ந்துமிருக்கின்றது. உலகில் காணப்படும் எல்லாமிருகங்களிலும், மனிதனே மிக்க அறிவுள்ளவனாவான். ஏனெனில், ஜீவித்திருக்கக்கூடிய எல்லா ஜந்துக்களையும்விட, மனிதனுக்குத்தான் அவனுடைய மூளையில் அதிகமான தோற்றத்தையுடைய மூளைப் பதார்த்தங்கள் அடங்கியிருக்கின்றன.

உலகிலுள்ள மிருக வர்க்கத்திலேயே, யானையையும், திமிங்கிலத்தையும் தவிர்த்து, மனிதனுடைய மூளையானது எடையில் அதிகமாகயிருந்து வருவதுடன், மற்ற எல்லா ஜீவராசிகளின் மூளையையும் விட அவனுடைய மூளையே அதிக விரிவாயும், அகலமாயுமிருக்கின்றது. மனிதன்போதிய அறிவுடன் விளங்கவேண்டுமானல், அவனுக்கு ஓர் குறித்த அளவுள்ள மூளை இருக்க வேண்டுமென்பது இன்றியமையாததாகின்றது. மனித வர்க்கத்தினரின் மூளை சராசரி $49\frac{1}{2}$ அவுன்ஸ்கள் எடையுள்ளதாயிருக்கின்றது. மூடர்களுடையவும், பைத்தியக்காரர்களுடையவும் மூளையானது, பதினறு அவுன்ஸ்களிலிருந்து முப்பத்திரண்டு அவுன்ஸ்கள் வரையிலும் எடையுள்ளதாகவே தான், குறிப்பாக இருந்து வருகின்றது;

ஆனல் சுமார் நாற்பத்திரண்டு வயதுள்ள, பைத்தியம் பிடித்த ஓர் பெண்பிள்ளையின் மூளையானது பத்து அவுன்ஸ்களுக்குக் கொஞ்சம் அதிகமாகத்தான் எடையிருந்தது. இதற்கு மாருக, விசேஷித்த அறிவும், ஆற்றலும் வாய்ந்தவர்களின் மூளையானது, பொதுவாகவும், சிறப்பாகவும் அதிகப்படியாக விசேஷித்தே இருந்து வருகின்றன. மக்களின் சராசரி மூளை யானது மூன்று பவுண்டுகளுக்கு மேல் கொஞ்சம் அதிகமாக எடையில் இருந்து வந்த போதிலும்கூட, பிரான்ஸ் தேசத்திய, கீர்த்திவாய்ந்த, தாபர சங்கம சாஸ்திரி குவியரின் (Cuvier) மூளையோ, சற்றேறக்குறைய நான்கு பவுண்டுகள் எடையுள் ளதாக இருந்தது. மேலும் கிளேட்ஸ்டனின் (Gladstone) மூளையோ ஐந்து பவுண்டு மூன்று அவுன்ஸ்கள் எடையிருந்ததா கக் கூறப்படுகின்றது. உலகத்திலேயே விசேஷித்த, அதிகப்ப டியானமூளையுடன்விளங்கியமக்களில்கிராம்வெல்(Cromwell), பைரன் (Byron), ஷில்லர் (Schiller), நெப்போலியன் (Napoleon) ஆகியவர்களின் மூளைகளும் சேர்க்கப்பட வேண்டும்—அவர்கள் யாவரும் அளவிறந்ததும், பலமும், சத்துமுள்ளதுமான எண்ணங்களையும், கருத்துக்களையும், சிந்தனைகளையும் வாய்க்கப்பெற்றவர்களாவார்கள். குறைந்த அளவுள்ள மூளைகளையுடைய சில மனிதர்களும் மேன்மை யாகவும், சிறந்தும் விளங்கியதாகவும் உரைக்கலாம். அவ ர்கள் அவ்வாறு விளங்கியதற்கு, அவர்களுடைய மூளையின் பதார்த்தம் ஒன்று விசேஷித்தோ, அல்லது நூதனமான தாகவோ இருந்திருக்க வேண்டுமென்பதுடன், அதனுடைய மேலான இயல்பும், தன்மையும் காரணங்களாகும். அல்லது அவர்களுடைய விசேஷித்த, பெருமுயற்சியும் காரணமாக லாம். ஆனல், சில நோக்கங்களில் மட்டும் பெருமையோ, அல்லது மேன்மையோ அடைவதற்கு ஒரு குழந்தையின் சிறிய மூளையே காரணமாயிருந்துவந்த போதிலும் கூட, பல

விஷயங்களையும் தழுவிய, விரிவான பெருமையோ அல்லது மேன்மையோ, மகத்துவமோ அல்லது மாக்ஷிமையோ விசேஷித்தும், பருத்தும், விஸ்தாரமானதாயும், உருவத்தில் நன்றாக அமைந்து மிருக்கக்கூடிய மூளையைத்தவிர்த்து, வேறு எந்தவிடத்திலும் காணவேமுடியாது.

ஒரு வகுப்பினர் மற்ற வகுப்பினர்களைவிட, உயர்ந்தவர்களாகவும், மேலானவர்களாகவும் விளங்குவதற்குக் காரணம், அவ்வகுப்பினரின் மூளையின் தோற்றமேதான் காரணமாகும். நீக்ரோ வகுப்பினரைவிட, காக்கேஷியன் வகுப்பினர்—வெள்ளையர் உயர்வாகவும், மேன்மையாகவுமிருந்து வருவதற்குக் காரணம் வெள்ளை மனிதனுடைய மூளையின் இதழ்கள் மிக்க மேன்மையாக இணைக்கப் பட்டிருப்பதுடன், பருத்து, விசாலமாகவுமிருந்து வருகின்றதினாலுமேதான்.

அறிவின் உறுதியும், ஊக்கமும், அதன் வல்லமையும், மனோவிகாரத்தின் சிறப்பும் மூளைச்சுருள்களின் எண்ணிக்கையையும், ஆழத்தையும் சார்ந்திருப்பதுடன், மூளையினுடைய மடிப்பையும், சுருக்கத்தையும், அதன் உண்மையான அளவையும்—அதாவது பரிமாணத்தையும் பொருத்தேயிருக்கின்றது. ஜீவவர்க்கத்தில் தாழ்ந்தவைகளான—அதாவது மீன்கள், பறவைகள் ஆகியவைகளின் மூளையின் மேற்புறம் சற்றேறக்குறைய சமமாக இருப்பதினாலேயேதான், அவைகளின் அறிவும் அதற்கேற்றாப்போல் குறுகியே யிருக்கின்றது. இவைகளைவிட ஜீவவர்க்கத்தில் சற்று உயர்ந்தவைகளான நாய், யானை, வாலில்லாக் குரங்கு ஆகியவைகளைக் கவனிப்போமேயானால், அவைகளுடைய மூளைபோதிய அளவு சுருள்களாக யிருப்பதைக் காணலாம். அதற்கேற்றாப்போல் அவைகளின் அறிவும் சற்று உயர்ந்தே இருக்கின்

றது. புதியதாகப் பிறந்த குழந்தையின் மூளையில் அந்தச் சுருள்கள் எல்லாம் அப்பொழுதுதான் உருவமடைய ஆரம்பிக்கின்றன. மூளை வளர, வளர அந்தச் சுருள்கள் யாவும் மூளையுடனேயே வளர்ந்துகொண்டு வருகின்றன. அதனால் மனதும் படிப்படியாகவும், மெதுவாகவும் வளர்ந்து, முதலில் காணப்படும் மங்கலான வெளிச்சத்திலிருந்து, பிறகு திரண்ட ஜோதியுடன் வீசும் பிரகாசம்வரை அறிந்து கொள்ள ஆற்றலுடையதாகின்றது.

மனம் எவ்வளவுக்கெவ்வளவு அதிதீவிரமான முயற்சிகளில் ஈடுபடுகின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு மூளையின் பருமனும் அதிகரிக்கின்றது. பிரதானமானதும், அவசியமானதும், உண்மையானதுமான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுழைக்கின்றவர்களின்—அதாவது தத்துவ சாஸ்திரிகள், கவிகள், விஞ்ஞான சாஸ்திரிகள், இராஜ தந்திர நிபுணர்கள், மாணவர்கள், பொதுவாகவேசிந்தித்து, யோசனை செய்யக்கூடியவர்கள் ஆகியவர்களின் மூளையானது, சாதாரணத்தொழிலாளர்களின் மூளையைவிட தோற்றத்திலும், வளர்ச்சியிலும் அதிகப்படியாய் தகுதியான அளவு பரிமாணமுள்ளதாயிருப்பதாகவும், ஆழமான சுருள்களால் பொதுவாகவே, அதிகப்படியாக மூளை நிரப்பப்பட்டிருப்பதாகவுமே, மக்களின் மூளையை சந்து சந்தாய்த்துண்டித்து, ஆராய்ச்சி செய்த தேகதத்துவ சாஸ்திரிகள் யாவரும் ஏகோபித்த அபிப்பிராயத்தையே வெளியிடுகின்றார்கள்.

மனிதனுடைய மூளையே அவனுடைய செய்கைகளுக்கும், எண்ணங்களுக்கும் காரணமாயிருந்து வருகின்றதென்பதை—அதாவது மனம் என்பது மூளையின் ஓர் தொழில் அல்லது செய்கையே என்பதை மற்றொரு உதாரணத்தால்

திருஷ்டாந்தப்படுத்தவேண்டுமானுல், உடற்கூற்று சாஸ்திரத்தில் அதற்குத்தக்க அத்தாக்ஷிகள் காணப்படுகின்றன. நரம்புக்குரிய தொழில்கள் ஒழுங்காக நடைபெறுவதற்கு மூளையே ஓர் மத்தியஸ்தானமாய் விளங்கிக்கொண்டும், அந்த மத்தியஸ்தானத்திலிருந்து தேகத்தின் ஒவ்வொரு பாகத்திற்கும் நரம்புகள் ஓடிக்கொண்டும், அதனுடன் இணைக்கப் பட்டிருப்பதாலேயேதான் வெளி உலகில் நடைபெறும் சம்பவங்களின் சாயல்களை, சேதன நிலய நரம்புகளின் உதவியால் மூளையானது கிரஹித்துக்கொண்டும், இதர நரம்புகளின் மூலியமாக செய்திகளை, மின்னல் தோன்றி, மறையும் நேரத்திற்குள்ளாகவே, அறிவித்துக்கொண்டும் வருகின்றது. ஆகையினுலேதான், மூளையானது கிரஹித்துக்கொள்ளக்கூடிய பல் வேறு சம்பவங்களின் சாயல்களை அனுசரித்து, மனமும் மாறுதலடைந்து வருகின்றது. மூளையின் செய்கையின் காரணமாக ஏற்பட்ட மனோ நிலைமையை, நமது உடல் பிரதிவிம்பிக்கச் செய்வதை நாம் எப்பொழுதும், குறித்த சம்பவங்களில், காணலாம்.

மனிதன் எனக்கூறப்படுபவன் இரண்டல்ல—மானசமாயும், சடமாயும் உள்ள ஒருவனேதான் மனிதன். சந்தோஷகரமான செய்திகளின் தூண்டுதலின் காரணமாக அவனுடைய கண்கள் பிரகாசிக்கின்றன, அவனுடைய சரீரம் இன்பத்தினுல் புளகாங்கிதமடைகின்றது; பயத்தின் காரணமாக அவன் முகம் வெளுத்து விடுகின்றது; வெட்கத்தின் காரணமாக அவன் நாணமடைகின்றுன்; உற்சாகத்தை யளித்து, உயிர்ப்பிக்கச் செய்யும் இரத்தமானது, கோபத்தின் காரணமாக அவனுடைய கன்னங்களைச் சிவப்புறும்படி செய்கிறது. தாங்கொணுவருத்தத்தினுல் அவதியுறும் ஒருவனைப்பார்ப்பதும், அல்லது வெறுப்புள்ளதும், சந்தோஷமற்றதுமான ஓர் காக்ஷி

யைக் காணுவதும் ஒருவனை மயக்க முறச்செய்யும் பயங்கர மனோவிகாரம் ஆதிக்கம் செலுத்துமேயானால், அவன் வாந்திசெய்வான். திடீரென உண்டாகும் வியசனம், அவனுடைய தலைமயிரை வெண்ணிறமாக்கிவிடும். அவனுடைய மூளைக்குள் இரத்தஓட்டம் அதிகரிக்குமேயானால், அவனுடைய எண்ணங்கள் குழப்பமடையும். இரத்த ஓட்டம் மெதுவாக இருக்குமேயானால், அவன்உணர்ச்சி யற்றிருப்பான் போதையை யளிக்கக்கூடிய சாராயம் முதலியவைகள் உட்செல்லுமேயானால், அவன் தன்னுடைய அறிவை இழந்து, வாயில் வந்ததையெல்லாம் பிதற்றி, மானபிமானம் என்பதை அறவே மறந்து, ஆவல், கோபம், காமம் ஆகியவைகளை அதிகரிக்கச் செய்யும். நித்திரை கெடுமேயானால், அவனுடையநினைவு, செய்கையாவும் மழுங்கலாகவும், மந்தமுள்ளதாகவுமிருக்கும். அளவுக்குமீறி நினைத்துக்கொண்டே யிருந்தால், அவன் தேகத்திலுள்ள தசைகுறைந்துகொண்டே வரும். ஏதாகிலும் ருசிகரமான உணவு தனக்குக் கிடைக்கப்போகின்றதென்னும் எண்ணமாவது, அல்லது நம்பிக்கையாவது அவனுக்கு இருக்குமேயானால், அவனுடைய வாயில் அதிகப்படியான நீர் கசியும்—அதாவது வாயூறும். அதிகமான உணவு உட்கொள்ளுவானேயானால், அவன் நித்திரை செய்யும் பொழுது பற்பல கனவுகளைக் கான்பான். அவனுக்குப் போதாத உணவை உட்கொள்ளுவானேயானால், விழித்திருக்கும்பொழுதே அவன் பற்பல கனவுகளைக் காண்பான். உடல் ஆயாசத்தினால் களைப்புற்று, தளர்ந்திருக்கும்பொழுது மனதும் தளர்ந்து, வாடியிருக்கின்றது. ஆனால், நித்திரையினால் உடலும், மூளையும் இளைப்பாறி, ஆயாசந்தீர்ந்து, உயிர்ப்பிக்கப் படுமேயானால், மனம், அப்பொழுது, மிக்கக் குதூகலத்துடன் தன்னுடைய தொழில்களுக்குத் திரும்புகின்றது. ஆகையினாலே நம்முடைய உடலின் நல்ல

ஸ்திகியானது நமது மனதையே அதிகமாகப் பொறுத்திருக்கின்றது—அதாவது மனது சந்தோஷமாயிருந்தால் உடலும் நல்லபடியாகவேயிருக்கும். உடல் வளர்ச்சியில்தான் மனதின் நிலைமை பிரதிபிம்பிக்கின்றது.

மூளையிலிருக்கும் பரமாணுக்களின் அசைவுகளால் நமது மனதில் எண்ணங்கள் மட்டும் உதித்து விடுவதில்லை. ஆனால், பலவிதமான மனோசக்திகளும் அங்கேயே தோன்றி, மூளையின் பல்வேறு பாகங்களிலும் அடைக்கப் படுகின்றன. உடலுக்கு இருப்பதைப் போன்றேதான் மூளைக்கும் பற்பலதொழில்கள் உண்டு. மனிதனின் ஒவ்வொரு பகுதியும், அதற்குச் சொந்தமான மூளையின் பதார்த்தத்தாலேயேதான் ஆக்ஷி செய்யப்பட்டு வரப்படுகின்றதென்னும் உண்மையை தாழ்மையான மிருகங்களின் மூளைகளை பரீக்ஷித்து, சோதனை செய்தவர்களும், மனித மூளையை ஆராய்ச்சி செய்த நிபுணர்களும் நமக்கு விளக்கமாக உரைத்து, நிதரிசனமாக, மெய்ப்பித்தும் காண்பித்திருக்கின்றார்கள். அவ்வாறு அமைந்திருப்பதினாலேயேதான் மூளையின் ஒரு பிரிவினால் நாம் பார்க்கின்றோம், மற்றொரு பிரிவினால் நாம் கேட்கின்றோம். ஒரு பிரிவினால் நாம் ருசிகளை அறிகின்றோம், மற்றொரு பிரிவினால் நாம் ஸ்பரிசத்தை அறிந்து கொள்ளுகின்றோம். மூளையின் மற்றொரு பிரிவின் வேலையோ, நாம் மோப்பத்தை முகர்ந்து, உணர்ந்து கொள்ளக்கூடிய அறிவை ஆக்ஷி செய்வதேயாகும். நமது உடலின் பல்வேறு அங்கங்களையும் ஒன்றாக இணைத்து, அவைகளை ஆக்ஷிசெய்து வருவது நமது மூளையேயாகும். மூளையிலுள்ள நரம்புகளின் உத்திரவைப்பெற்றுத்தான் நாம் நமது கண்களையும், உதடுகளையும், கரங்களையும், கால்களையும் அணுகுகின்றோம். சுவாசித்தல், தும்மல், இருமல், வாயில் நீரூறல், விழுங்குதல் ஆகிய எல்லாச் செய்கை

களும் மூளையிலுள்ள அந்தந்த நரம்புகளாலேயேதான் முறையே ஆக்ஷி செய்யப்படுகின்றன. புத்தி சம்பந்தமான கருவியும், காட்சி சம்பந்தமான கருவியும் மூளையின்கண் தான் —அதாவது அவை மூளையின் முன் பக்க மடல்களில் தான் அமைக்கப்பட்டிருக்கின்றன. மனோசலனம், மனோவிகாரம் ஆகியவைகள் மூளையின் சுவர்களாயமைந்துள்ள மடல்களிலே உற்பத்தியாகின்றன. மூளையின் ஒவ்வொரு பாகமும் குறித்த ஓர் தொழிலையே தான் செய்கின்றது. இவ்வாறு செய்யப்படும் நானாவிதத் தொழில்களையும் ஒன்றாகச் சேர்த்துத் தான், நாம் மனம், அல்லது ஆன்மா என்பதாகக் குறிப்பிடுகின்றோம்.

மேலும், நம்மால் இம்மாதிரியாக மனம் அல்லது ஆன்மாவென்பதாகக் கூறப்பட்டு வரும் இந்த ஆன்மாவை, மூளையைச் சிறுசிறு உறுப்புகளாக துண்டித்து நிர்மூலமாக்குவதின் மூலம், (ஆன்மாவையும்) சிறு சிறு பகுதிகளாகத்துண்டித்து நாசம் செய்து விடலாமென்பதாக உடற் கூற்று சாஸ்திரம் நமக்கு ஜ ருப்படுத்துகின்றது. பரீட்சார்த்தமாக சோதனை செய்து பார்க்கப்பட்ட மிருகங்களின் கிரியைகள் யாவும், குறிப்பிடப்பட்ட தொழில்களுக்குறிய மூளையின் குறிப்பிட்ட பாகங்களை, நாசம் செய்வதின் மூலம், ஒன்றன் பின் ஒன்றாக மறைந்து போய் விடுவதை, பிரான்சு தேச உடற் கூற்று சாஸ்திர நிபுணரான தோழர் ப்லாரன்ஸ் என்பவர் கண்டறிந்தார். ஆன்மாவை நிர் மூலமாக்குதல் அல்லது நாசஞ்செய்தல் என்னும் தொழிலில் அவர் மும்முரமாக ஈடுபட்டு, முதன் முதலாக கோழிகளை பரிசோதனை செய்ய ஆரம்பித்தார். அவர் சில கோழிகளைப் பிடித்து, அவைகளின் மூளைகளில், சிந்திக்கும் தொழிலைப்புரியக்கூடிய பாகங்களை அடியோடு நாசம் செய்து பார்த்ததில், அவைகள்

மீண்டும் உயிருடனேயே வாழ்ந்து வருவதை அறிந்தார். ஆனால், அவைகள் அப்படி உயிருடன் வாழ்ந்தபோதிலும் மூடமாகவும், மந்த புத்தியுடையதாகவுமே விளங்கின. அவைகளின் மனது ஒன்றையும் உணர்ந்து கொள்ளுவதற்கு முடியாமல் கற்களைப்போல் யாதொருவித உணர்ச்சியுமின்றி யிருப்பதையுமுணர்ந்தார். அவைகள் யாதொருவித உணர்ச்சியுமில்லாமலிருந்து வந்ததுடன் எத்தகைய தூண்டுதலையும் அவைகள் அறிந்துகொள்ளமுடியவில்லை. ஆகையால், அவர், அவைகளுக்கு வேண்டிய ஆகாரங்களை செயற்கையால் ஊட்டிவளர்த்து வந்தார். அவ்வாறு அவைகள் செயற்கையாகப் போஷிக்கப்பட்டு வந்தபடியால் அநேகமாதங்கள்வரை-அவைகளில் சில அநேக வருடங்கள்வரையிலும் கூட — ஜீவித்திருந்தன. அவைகள் உயிருடன் ஜீவித்திருந்ததுமன்றி, எடையிலும்கூட அவைகள் அதிகரித்தே வந்தன—அதாவது அவைகள் நன்றாக சதைப்பிடித்து கொழுத்துமிருந்தன. இக்கோழிகளை விட சற்று உயர்ந்த உயிருள்ள பிராணிகளையும் இம்மாதிரியாகவே பரீக்ஷித்து சோதனை செய்துபார்த்ததில், எந்த ஓர் குறித்த தொழிலுக்குறிய மூளையின் ஓர் குறித்த பாத்தை நாசம் செய்து விடுகின்றோமோ, அக்குறித்த பாகத்தின் ஆன்மா மட்டும் நாசமடைந்துவிடுவதை ஒவ்வொருதடவையிலும் நமக்கு விளக்கிக்காண்பிக்கப்பட்டது.

இம்மாதிரியாகவேதான் மனிதர்களின் மனதையும்—அதாவது ஆன்மாவையும் மிருகங்களின் மனதைப்போலவே நாம் துண்டித்து, சின்னாபின்னமாக்க முடியும்.

ஓர் மனிதனுடைய பார்வைக்குச் சம்மந்தமான மூளையின் பாகமானது இரத்த ரோகத்தினால் பாதிக்கப்பட்டால் அவன் குருடனாகின்றான். கேட்கக்கூடிய மத்திய பாகம்

நாசமாக்கப் பட்டால், அவன் செவிடனாகின்றான். இம்மாதிரியே அவனுடைய இதர செய்கைகளுக்குச் சம்பந்தப்பட்ட மூளையின் பாகங்கள் பாதிக்கப்பட்டால், அவன் குறித்த அந்தந்த உணர்ச்சியை இழந்து விடுகின்றான். பேசும் தொழிலுக்குச் சம்பந்தமான மத்தியபாகம் ஒருவனுக்குப் பாதிக்கப்பட்டால், சொறகளால் தன்னுடைய அபிப்பிராயத்தை வெளியிடும் படியான சக்தியை அவன் இழந்து விடுகின்றான். மூளையின் இந்தக்குறித்த பாகமானது செவிடர்களுக்கும், ஊமைகளுக்கும் பாதிக்கப்படுமேயானால், அவர்கள் அப்பொழுது தங்களுடைய அபிப்பிராயங்களை சைகைகளின் மூலம் அறிவிக்கக்கூடிய சக்தியைக்கூட இழந்து விடுகின்றார்கள். மூளையில் குழப்பங்களேற்பட்டால்—அதாவது மூளை கலக்கமடைந்தால், மனிதனுடைய அறிவே நிர்தூளியாக்கப்படுகின்றது.

சத்திரப்பிரயோகம் செய்யும் வைத்தியனுடைய ஆயுதங்களின் முன்னிலையிலும், அல்லது கேடான கெடுதிகளாலும், அல்லது வியாதிகளாலும் மனிதனுடைய மூளையானது படிப்படியாக ஒவ்வொரு தொழிலையும் இழந்து, நாளாவட்டத்தில் அறிவுக்குறிய அடையாளங்களே அவனுடைய பாழ்பட்ட மூளையினின்று அறவே அகன்று, அம்மூளையுடனேயே அவனுடைய மனதும் அழிந்து, நாசமாகக்கூடியதைப்பார்த்தும், அறிந்து மிருக்கும் பொழுது, மனதும் நாசமாகி விடக்கூடியது அல்லது இறக்கும் தன்மை வாய்ந்தது என்பதற்கு இதைவிட பலத்த உதாரணம் வேறு என்ன வேண்டியிருக்கின்றது?

ஆனால், "அகண்ட சமுத்திரத்தில் மூழ்கி, இறக்குந்தருவாயிலிருக்கும் ஒருவன் துரும்புகளையும் தாவிப்பிடிப்பான்"

என்னும் ஓர் பழமொழி உண்டு. ஆகையினாலே, சில தத்துவ சாஸ்திரிகள் நீண்ட நாட்களாக போஷித்து வளர்க்கப் பட்ட ஓர் கொள்கையை விட்டு விட மனம் சம்மதிக்கின்றார்களில்லை. மேலும், இந்த நமது தேசத்திலுள்ள மூலவஸ்துக்கள் யாவும் மண்ணோடு மண்ணாக மறைந்து போன பிறகும் கூட, நமது ஆன்மாவானது அழிந்து போகாமல் உயிருடன் மீண்டும் ஜீவித்துக்கொண்டு தான வருகின்ற தென்னும் கொள்கையை நிலைநாட்டுவதற்காகவேண்டி, அவர்கள் ஆச்சரியகரமானதும், பகுத்தறிவுக்குப் பொருந்தாததுமான கற்பனைகளைக்கொண்டு வாதம் புரிந்து வருவதும் ஆச்சரியப்படத்தக்க விஷயமானதல்ல. இத்தகைய மனப்பான்மை வாய்ந்த தத்துவ சாஸ்திரிகளில், ஹார்வார்டு சர்வகலாசாலையிலிருந்த (Harvard University) ஆத்ம தத்துவ நூல் போதகாசிரியரும், மிக்கக் கீர்த்தியும், புகழும் வாய்ந்தவருமான காலஞ்சென்ற வில்லியம் ஜேம்ஸ் (William James) என்பவரும் ஒருவர் ஆவர். புரபசர் ஜேம்ஸ் அவர்களின் கோட்பாடு புதியதல்ல. அவர், ஒருசமயம் அக்கோட்பாட்டை மக்களின் மனதில் ஆழமாக வேரூன்றிய ஓர் கொள்கையாகுமென்பதை விடுத்து, இக்கோட்பாடானது சிந்திக்கப்பட வேண்டிய ஓர் தனி விஷயமாகுமென உபதேசித்து மிருக்கலாம். புரபசர் ஜேம்ஸ் என்பவர் விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் பொழுது, மனம் என்பதானது மூளையின் ஓர் தொழில் ஆகும் என்பதை அவர் செவ்வனே உணர்ந்திருந்ததுடன் விஞ்ஞான சாஸ்திரத்தில் ஒலி என்பதைப்பற்றி போதிக்கும் பொழுது இந்தக் கோட்பாட்டையே அவர் முழுமனதுடன் ஆமோதித்து வந்தது மின்றி, பல அத்தாக்ஷிகளுடன் இவ்வுண்மையை ருசுப்படுத்தியும் காண்பித்திருக்கின்றார். ஆனால், இந்த உண்மையை இவர் ஒப்புக்கொண்ட போதிலும்கூட,

தம்முடைய "மானிட அழிவின்மை" என்னும் பிரசங்கத்தில், "மனம் என்பது ஒருசமயம் மூளையினுல் தோற்றுவிக்கப்படாதிருக்கால"மெனவும், "அது ஒரு சமயம் நமக்குத்தெரியாத உலகிலிருந்துவரலா"மெனவும், "அவ்வாறு அது ஒரு மனிதனுடைய மண்டைக்குள் பிரவேசித்ததும், அபிப்பிராயங்களை அறிவிப்பதற்காக இங்கு அது மூளையை ஓர் கருவியாக உபயோகிக்கின்ற"தெனவும் "மூளை நாசமடைந்தவுடன்—அதாவது இறந்தவுடன் அது, தனது பூர்வீக இடத்திற்குப்பறந்து, சென்றுவிடுகின்ற"தெனவும் உத்தேசத்துடன் உரைத்திருக்கின்ருர்.

மனதின் உற்பத்திஸ்தானம் மனிதனுக்கும் புறம்பாகத் தானிருக்க வேண்டும் என்னும் கொள்கையானது, மனதை மனிதனின்றும் வேறுபடுத்தி, அதை ஓர் தனி மூலவஸ்துவாகக் கூறப்பட்டு வருவதானது, ஆதிகால தத்துவ சாஸ்திரிகளில் முதன்மைவாய்ந்த தோழர் ப்லேட்டோ (Plato) அவர்களின் மனோவாசமான உண்மைகளாகிய கிரேக்க தேசத்திய கொள்கைகளில் தப்பிப்பிழைத்த கடைசி சவமாகும். தோழர். ப்லேட்டோ அவர்களின் கூற்றுப்படி, உருப்புள்ள வஸ்துக்களும், உருப்பில்லாத வஸ்துக்களும் தங்கள் தங்களுடைய சிறப்பான குணங்களை, முறையே தங்கள் தங்களுடையஉண்மைகளினிடமிருந்துதான் அடையப்பெறுகின்றன. ஒரு மனிதனே எண்ணுகின்ருன், ஒரு நாயோ அதனுடைய எஜமானனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கின்றது, ஒரு மரமோ வளர்கின்றது, ஒரு சிலேச்சோ உருவம் இருக்கின்றது. இவைகளுக்குக் காரணமென்னவெனில், இவைகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு நிராகார எண்ணம்—அதாவது ஆன்மா, உண்டு என்பதே யாம். கிறிஸ்து மத போதனைகளில், இந்த உண்மையானது அநேக நூற்ருண்டுகளாக, சர்வசாதாரணமா

கவே போதிக்கப்பட்டுவந்தது. ஆனால், நாளாவட்டத்தில்—அதாவது விஞ்ஞான சாஸ்திரம் முன்னேறிக்கொண்டேவருவதினிமித்தம், உலகத்திலிருந்து இத்தகைய விபரீதாசாரங்கள்—அதாவது மூடபக்திகள், சம்மட்டியால் தலைகளின்மீது அடிக்கப்பட்டு, நிர்தூளியாக்கி வந்தபோதிலும்கூட, இந்த ஒரு விஷயத்தில் மட்டும் மக்கள் இன்னும் போதிய அளவு மனமாற்றமடையவில்லை. உலகத்தில் காணப்படும் எல்லாக் காரியங்களும், அவைகளின் இயல்பான சொந்த சக்திகளை அநுசரித்தே நடைபெற்றுவருகின்றதென்பதை மக்கள் உண்மையாகவே ஒப்புக்கொண்டபோதிலும்கூட, மானிட மனதைக்குறித்தமட்டில் இதே உண்மையை ஒப்புக்கொள்ள மறுக்கின்றார்கள். மானிட மனது மட்டும் ஓர் அரூபவஸ்துவென பல மக்களால் இன்னும் நம்பப்பட்டு வருவதுடன், அது ஓர் தனியான சுயம்பான வஸ்துவெனவும், வேறு உலகிலிருந்து இவ்வுலகிற்கு வந்து, மூளைக்குள் பிரவேசித்து, அதைக் கொஞ்ச காலத்திற்குத் தனது இருப்பிடமாக்கிக் கொள்ளும் ஓர் மூலவஸ்துவெனவும் இன்னும் இக்காலத்தும் பலரால் கருதபட்டுப் வரப்படுகின்றது.

இவைகளை நாம் சிந்தித்துப் பார்க்கும்பொழுது, இப்பரந்த உலகில், எங்கேயோ ஓர் இடத்தில் ஒரு பெரிய மனக் களஞ்சியமிருந்து வருவதாகவும், ஒவ்வொரு குழந்தையும் ஜனனமாகும் பொழுதெல்லாம் அக்களஞ்சியத்திலிருந்து ஓர் சிறிய பாகம் இப்பூமிக்கு வந்து, அக்குழந்தையின் மண்டைக்குள் பிரவேசித்து விடுகின்றதெனவுமே எண்ணவேண்டியிருக்கிறது. ஆனால், சக்தியின் ஓர் உருவாகிய இந்த மனதின் இராச்சியமானது சடப்பொருளினின்றும் பிரிந்து, வேறுபட்டு, எவ்வாறு தனிமையாக இருக்க முடியும்? அவ்வாறு ஓர் நிலைமை இருக்க முடியுமெனக்கருதுவதானது, நினைத்தற்கரிய ஓர் செயலேயாகும்.

மேலும், ஒரு குழந்தை ஜனித்ததும், அப்பொழுது அக்குழந்தைக்குப் போதுமான மனது மட்டும் குழந்தையின் மண்டைக்குள் பிரவேசிக்குமேயானல், அக்குழந்தை வளர, வளர, அத்துடனேயே அக்குழந்தையின் மனதும் நாளா வட்டத்தில் அபிவிருத்தியடைந்து, குழந்தை ஓர் பெரிய மனிதனாகும்பொழுது, மனிதனுக்குரித்தான மனது அக்குழந்தைக்கு எப்படி உண்டாகநேரிடும்? ஒரு குழந்தை ஜனித்த உடனேயா, ஒரு மனிதனுக்கு வேண்டிய அளவு மனது கீழேவந்து விடுகின்றது? அவ்வாறு கீழே வந்த மனது, ஒரு குழந்தை வளர, வளர, கொஞ்சம், கொஞ்சமாகவே தான் அக்குழந்தையின் மண்டைக்குள் பிரவேசித்துக்கொண்டு வருகின்றதா? அவ்வாறு கொஞ்சம் கொஞ்சமாக அக்குழந்தையின் மண்டைக்குள், நாளாவட்டத்திலேயே அம்மனது பிரவேசிக்குமேயானல், அப்பொழுது மீதியிருக்கக்கூடிய மனது வெளியே காத்துக்கொண்டுதான் நின்றுகொண்டிருக்கின்றதா? அல்லது, அதி உயரத்திலிருக்கக்கூடிய அந்தப் பெரிய மனக்களஞ்சியத்திலிருந்து குழந்தையின் மண்டையின் மீது, அந்த மனது, முதலில் மெதுவாகவும், கொஞ்சமாகவும் விழுந்து, பிறகு அக்குழந்தை, குழந்தையின் பிராயத்தைத் தாண்டி ஆண்மைத்தனத்தையடையும் வரையிலும் இடையேயுள்ள அந்த அநேக வருஷங்கள் வரையும் அம்மனது வேகமாகவும், அதிகமாகவும் விழுந்து கொண்டுவருகின்றதா?

இத்தகைய நூதனமானதும், வீண் தோற்றத்தையுடையதுமான எண்ணத்திற்கு இன்னுமொரு ஆக்ஷேபனையிருக்கின்றது. மனம் மூளைக்குள்ளேயே உற்பத்தியாகவில்லையெனவும், ஆனல் அது அடுத்த உலகத்திலிருந்து பறந்து வந்து, மூளைக்குள் பிரவேசிக்கின்றதெனவும், அவ்வாறு மூளைக்குள் பிரவேசித்து, அபிப்பிராயங்களை அறிவிப்

பதற்காக வேண்டி அது இங்கிருக்கும் பொழுது மூளையை ஓர் வாகனமாக மட்டும் உபயோகித்துக்கொண்டு வருகின்ற தெனவும் கூறப்படுவதாகயிருந்தால், மனதின் பல்வேறு பாவங்களையும் நாம் எவ்வாறு வியாக்யானம் செய்யமுடியும்? மேலும், மனிதர்களின் மூளைகளில் மனங்கள் யாவும் வாசம்செய்துகொண்டுவரும் பொழுது மக்களுக்கு உண்டாகக் கூடிய மாறுபாடுகளுக்கும் நாம் என்ன காரணம் சொல்ல முடியும்? ஓர் காட்டுமிராண்டிக்கு, அநாகரீமான ஓர் மனதுதான் அளிக்கப்பட்டிருக்கின்றதா? ஓர் மூடனுக்கு, மூடத்தனமான மனதுதான் கொடுக்கப்பட்டிருக்கின்றதா? ஆபிரிக்கா தேசவாசியான ஒருவன், கருநிறம்வாய்ந்தவனாக யிருக்கின்றான் என்னும் காரணத்தையே பிரதானமாகக் கொண்டுதானா நீக்ரோ (Negro) மனதை உடையவனாக யிருக்கின்றான்? இயற்கையை வர்ணித்து, அதன் அழகில் ஈடுபட்டு, அதன் மகத்வத்தில் மூழ்கியிருக்கக்கூடிய ஒருவனுடைய மனம் மிகவும் சிறந்து விளங்குவதற்குக் காரணமென்ன? ஒருவனுடைய மனது யோக்கியமாயும், உத்தமமாயும், கரைகடந்த அன்புடனும்விளங்குவதற்குக் காரணந்தான் என்ன? மற்றொருவனுடையமனது குரூரமாகவும், கடினமாகவுமிருந்துவருவதற்கும், அவன்துஷ்டச் செய்கைகளிலேயே சதா இன்புறுவதற்கும் காரணந்தான் என்ன? இன்னும் ஒருவனுடைய மனம், அநேக வருடங்கள் வரையிலும் நன்றாகவேயிருந்து, பின் உன்மத்தமாகி, பைத்தியம் பிடிப்பானேன்?

மூட பக்தி, விபரீத ஆசாரம், சீரழிவு, பலவீனம், தளர்ச்சி, குற்றம், பழி, சிறந்த அறிவு, சாதாரண அறிவு ஆகியவைகள் யாவும் உற்பத்தியாகி வெளித்தோன்றக்கூடிய மனம் என்னும் சமுத்திரம் எங்கேயாகிலும் இருக்கின்றதா? ஒரு மனிதன் தன்னுடைய எண்ணங்களிலும், செய்கைகளிலும்

மூடபக்தி, விபரீத ஆசாரம், சீரழிவு, பலவீனம், தளர்ச்சி, குற்றம், பழி, சிறந்த அறிவு, சாதாரண அறிவு ஆகியவை களுடன் நிரையப்பெற்றவனுய்க் காணப்படுவதற்கு, மனம் என்னும் அந்தப் பரந்த சமுத்திரத்திலிருந்து இத்தகைய குணங்கள் வெளியாகி, அவனுடைய மூளையில் குடியேறி, வாசம் செய்துகொண்டு வருவதுதான் முக்கியக் காரண மாகுமா?

மனம் என்பது ஒருவனுக்கு உண்டாவதற்கு, அவனு டைய மூளையே காரணமாகாதெனக்கூறும் பக்ஷத்தில், மன த்துடைய அளவும், குணமும் மூளையின் அளவையும், குணத் தையும் ஏன் பொறுத்திருக்க வேண்டும்? குறித்த ஓர் அள வுள்ள எடைக்குக் கொஞ்சமாக ஓர் மனிதனுக்கு மூளையிருக் குமேயானல், அவன் சாதாரண அறிவுடன் கூட விளங்காம லிருந்துவருததற்குக்காரணமென்ன? மூளைக்கு ஏதாகிலும் ஓர் கெடுதி உண்டாகுமேயானல், அப்பொழுது அக் கெடுதியுண் டான பாகத்தின், மனதிற்குரிய கருவிகளும், தொழில்களும் எப்பொழுதும் நாசமாக்கப்படுவதற்குக் காரணந்தான் என்ன? அல்லது, உண்மையாகவும், யோக்கியமாகவு மிருக்கக்கூடிய ஒருவன், திடீரென பொய்யனுகவும், திருட னுகவும் மாறிவிடுவதற்குக் காரணம் என்ன? அல்லது, பிற ருக்குத் துன்பங்களை விளைவித்து, அவர்களுடைய பொருள் களை சூறைபாடி, அவர்களுடைய துன்பங்களைக்கண்டு சந் தோஷித்து, இன்புறக்கூடிய ஒருவன், அது வரையிலும் தான் செய்துகொண்டுவந்த துஷ்டத்தனங்களை அறவே நீக்கி திடீரென அன்புள்ளவனுகவும், உண்மையுள்ளவனுகவும், யோக்கியதா பக்ஷமுடையவனுகவும் மாறிவிடுவதற்குக்காரண ந்தான் என்ன? மூளைக்கு ஏதாகிலும் ஓர் வியாதி உண்டாகி,

அதனால் கோளாறுகள் ஏதாகிலும் ஏற்படுமேயானால், அப்பொழுது அது மனிதனுடைய அறிவை மழுங்கச்செய்து, அவனுடைய மனதை பைத்தியமாக்குவதற்கும் காரணந் தான் என்ன?

மனம் என்பது மூளையின் ஓர் தொழில் அல்ல எனக் கூறும் பக்ஷத்தில், தேகத்தின் பல்வேறு மாறுபாடுகளுக்கும் அது ஏன் எல்லாத் துறைகளிலும் அடிமைப் பட்டிருக்க வேண்டும்? மக்களுக்கு வயது முதிர்ந்து, அவர்கள் வயோதிக திசையையடைந்ததும், அதுவும் ஏன் கிழப்பருவத்தையும், தளர்ச்சியையுமடைந்து, தன்னைச் சிறைப்படுத்தி வைத்திருக்கும் மூளையுடனேயே அழிய வேண்டும்? மக்கள் வயோதிகர்களாயிருக்கும்பொழுது அவர்களுடைய கண்கள் பஞ்சடைந்து, பார்வை மங்கிவிடுவதையும், செவிகள் சுரணையை யிழந்து, கேட்கும் சக்தியை இழந்து விடுவதையும், அவர்கள் தங்களுடைய ஞாபகத்தை இழந்து, விஷயங்களை மறந்து விடுவதையும், அவர்கள் தங்களுடைய அபிப்பிராயங்களை, நாத்தடுமாறிக்கொண்டே அறைகுறையாக வெளியிட்டு வருவதையும், அவர்கள் வாலிபர்களாயிருந்த பொழுது அவர்களுக்கிருந்த ஊக்கமும், முயற்சியும், அவர்களுடைய பூரா அறிவும், ஆற்றலும் இப்பொழுதுமங்கியும், குன்றியும்போய், கிழப்பருவத்தையும், தளர்ச்சியையுமடைந்த மூளையின் தணலை அனுசரித்து அது விளங்கிக்கொண்டு வருவதை நாம் காண்பதில்லையா? இத்தகைய சந்தர்ப்பங்களில், உயிர் முடிவடைவதற்கு முன்பாக, மனமும் கொஞ்சம் கொஞ்சமாக இறந்து கொண்டேவந்து, மரணம் ஏற்பட்ட உடனே அது மீதியிருக்கக் கூடிய யனத்தையும் முடிவெய்யும்படியாகச் செய்து விடுகின்றது.

மனம் அல்லது ஆன்மா எனக்கூறப்பட்டு வருவதானது, ஏதோ ஓர் உலகத்திலிருந்து வந்து, மூளைக்குள் பிரவேசிக்கின்றதென்பது உண்மையாகவே இருக்கும் பக்ஷத்தில், அதற்குத்தன்னுடைய ஆதிஉற்பத்தி ஸ்தானத்தைப்பற்றி ஒன்றுமே தெரியாமலிருப்பதும், அதைக்குறித்த ஞாபகம் கூட இல்லாமலிருப்பதும் ஆச்சரியமல்லவா? மேலும், அதற்குத் தன்னுடைய முன் ஜனனத்தைப்பற்றிய விபரங்கள் ஒன்றுமே அறிந்து கொள்ளச் சக்தியின்றியும், அதனுடைய எதிர்கால வாழ்க்கையைப்பற்றிய விபரங்கள் கூட ஒன்றுமே அறிந்து கொள்ளுவதற்கு முடியாமல், குருடனைப் போல் இருட்டிலும், சந்தேகத்திலும் நடமாடிக் கொண்டிருப்பதும் ஆச்சரியமாகக் காணப்படவில்லையா?

ஒரு சங்கீத வித்வானுக்குத் தன்னுடைய சங்கீதக்கருவியின் மீது எத்தகைய பொறுப்பு உண்டோ அத்தகைய பொறுப்பும், சம்மந்தமும் தான் ஆன்மா அல்லது மனதிற்கும், மூளைக்கும் ஏற்படுகின்றது என விவாதிக்கக் கூடியவர்கள் யாவரும், சைதன்னியம் என்பது மூளையின் ஓர் இயல்பு ஆக மாட்டாதென்னும் நம்பிக்கை யுடனிருந்து வருகின்றார்கள். ஆனால் மனதின் போக்கும் மூளையின் போக்கும் வளர்ச்சியில் ஒன்றை ஒன்றுத் தழுவியே தானிருக்கின்றன. வீணை வாசிக்கும் சங்கீத வித்வானுடனேயா, அவன் வாசிக்கும் அந்த வீணையும் அம்மாதிரியாகவே வளர்ந்து கொண்டு வருகின்றது? மூளைக்களைப்படைந்திருக்கும்பொழுது மனம் நித்திரை செய்கின்றது. இம்மாதிரியாகவே, வீணை வாசிப்பவனுடன் வீணையும் களைத்து, அலுத்துப்போய் உறங்குகின்றதா? நித்திரையிலிருக்கும்பொழுது மனமோ பற்பல கனவுகளைக் காண்கின்றது. அம்மாதிரியாக, வீணை வாசிப்பவன் உணர்ச்சியற்றிருக்கும்பொழுது அவனுடைய வீணையா

னது அபசுரமான இராகங்களை வாசிக்கின்றதா? சங்கீத வித்வானுடைய கருவியாகிய வீணை சான்பிரான்சிஸ்கோ (San Francisco) என்னும் நகரிலிருக்கும்பொழுது, சங்கீத வித்வானோ நியூயார்க் (New York) என்னும் பட்டணத்திலிருக்கலாம். அதே மாதிரியாக, மனமும் மூளையினின்று தன்னைத்தானே பிரித்து, வேறுபடுத்திக்கொள்ள முடியுமா? மூளையில் ஏதாவது ஓர் வியாதி சம்பவித்து, கோளாறுகள் ஏற்படுமேயானால், அப்பொழுது மனதிற்குப் பைத்தியம் பிடிக்கின்றது. இதேபோல், வீணையில் உள்ள ஓர் கம்பியானது அறுந்துவிடும் பக்ஷத்தில், வீணையை வாசிப்பவனும் தன்னுடைய அறிவை இழந்துவிடுகின்றானா? சங்கீதக் கருவியை உடைத்து, நாசமாக்கிய பிறகு கூடவா சங்கீத வித்வான் தன் முழுத் திறமையுடன், எப்பொழுதுமிருந்து வரமுடியும்? ஆகையினாலே, வீணைவாசிக்கும் வித்வான் இருக்கின்றவரையிலும், வீணையும் இருந்து தான் தீரவேண்டுமென்கின்ற அவசியமும் நிர்ப்பந்தமும் ஏற்படவில்லையா? இந்த உபமானம், உண்மையாகவே, அழகாகக் காணப்பட்டபோதிலும்கூட, சைதன்னியத்தைப் பற்றிய விவரங்களொன்றையேனும் நாம் அறிந்துகொள்ளுவதற்கோ, அல்லது மூளையானது இல்லாமலிருக்கும்பொழுது கூட அது இடைவிடாமல், தொடர்ச்சியாக இருந்துகொண்டேதான் வருகின்றதென்பதைப்பற்றிய வர்த்தமானங்களைக் குறித்தோ நமக்கு ஓர் தகவலும் கிடைக்கவில்லை.

தேகத்தின் இதர அவையவங்கள் யாவும் அவைகளின் வெவ்வேறு இயக்கங்களுக்குக்கட்டுப்பட்டு, தங்கள் தங்களுக்கு இயல்பான தொழில்களைப் புரிந்துகொண்டு வரும் பொழுது, மூளை மட்டும்—எல்லா அவயவங்களைக்காட்டிலும் மிக்க அதிசயமானதும், ஆச்சரியகரமானதுமான பல சேர்க்கைகளினு

லுண்டாக்கப்பட்ட இந்த மூளை மட்டும், எதாகிலும் வேறு ஓர் அன்னிய உணர்ச்சியின் தூண்டுதலில்லாவிட்டால் மண்டை ஓடுகளால் உண்டாக்கப்பட்ட குகைக்குள்ளேயே உயிரற்ற ஓர் பிண்டம் போலாகத்தான் இருக்க வேண்டுமென யூகிப்பது நியாயமான ஓர் செய்கையாகுமா? இவ்வாறு யூகிப்பதின் மகத்தான மட்டித்தனத்தை, மனித உற்பத்தியைப் பற்றிய கதையானது நமக்கு, ஓர் படத்தைப்போல், தெளிவாகவும், விளக்கமாகவும், விபரமாகவும் எடுத்துரைக்கின்றது.

மனிதன் பரிணாமக் கொள்கையின் காரணமாக ஜனித்த ஓர் குழந்தையேயாவான். பல இலட்சக்கணக்கான வருடங்களாய், படிப்படியாய் சேகரிக்கப்பட்ட, எண்ணிக்கையற்ற அபிவிருத்திகளின் காரணமாக அவனுடைய உடலும், அவனுடைய் மூளையும் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. மனத்திற்கு உரித்ததும், சடத்திற்கு உரித்ததுமான மூலகிரஹணம் ஒன்றோடொன்று இசைந்து, ஒத்துவந்ததின் காரணமாக—அதாவது அவனுடைய மூதாதையர்கள் எண்ணற்ற மிருக உருவங்களிலிருந்து, ஜீவியத்துறையில் படிப்படியாக உயர்ந்து, முன்னேறிக்கொண்டே வந்ததின் காரணமாகவே, மனிதனுக்கு தற்போதிருக்கும்படியான அவனுடைய ஆன்மாவும், அதைவிடத் தாழ்ந்ததல்லாததுமாகிய அவனுடைய உடலும் தோன்றலாயின. ஜீவியத்துறையில் நீண்ட நாட்களாக பவனிவந்து, தற்காலம் அத்துறையில் உச்சஸ்தானமடைந்து, தலைமைவகித்திருக்கும் அந்த மனிதனுடைய, ஒவ்வொரு எலும்பிலும், ஒவ்வொரு நரம்பிலும் தன்னைவிடத் தாழ்ந்த நிலைமையிலிருக்கும்படியான மிருகங்களுடன் சம்மந்தப்படுத்தப்பட்டிருக்கும் அந்த மனிதனுடைய மனோபவங்கள் போலும் ஏனைய இதரமிருகங்களின் மனோபாவனை

யைக் காட்டிலும் அதிக வித்தியாசத்துடனேயே விளங்கு வதாகக் காணப்பட்டபோதிலும்கூட, இந்த வித்தியாசமா னது அளவில் மட்டுமே காணப்படுகின்றதே யல்லாமல், இனத்திலோ, அல்லது குணத்திலோ எள்ளளவும் வித்தியாச மாவதுமிருப்பதாகக்காணப்படவில்லை. மனிதனுடைய ஆத் மா—அதாவது அவனுடைய மனோசக்திகளின் ஒட்டுமொத்த மானது, மிருக உலகத்திலிருந்தே அவனுடன் கூடவே தோன்றியது. சடப்பொருள்களால் உண்டாக்கப்பட்ட அவனுடைய இந்தக்கூடானது எப்படி எல்லா விதங்களிலும் பிறவிக்கு உரியதானதாகவும், இயல்பானதாகவும் இருந்து வருகின்றதோ, அவ்வாறேதான் இந்த ஆத்மாவும் எல்லா விதங்களிலும் பிறவிக்கு உரியதானதாகவும், இயல்பானதா கவுமிருந்து வருகின்றது. இந்த ஆன்மாவானது தெய்வீக சக்தியின் ஓர் அக்கினிப்பொறி யென்பதாகவும், மரணத்தி ற்கு ஆளாகாமல், சதா அது ஜீவித்துக்கொண்டிருக்கும்படி யான தன்மை வாய்ந்ததென்பதாகவும், கூறிக்கொண்டு வரும் மக்கள் யாவரும் இப்பொழுது இந்தக் கேள்விக்கு விடை சொல்ல பிரயத்தனம் செய்யட்டும். தொடர்ச்சியாக வரப்பட் ட பரிணாமக் கொள்கையின் எந்தச் சந்தர்ப்பத்தில்—அதா வது எந்த நிலைமையில் இந்த ஆன்மாவானது நமது மூதாதை யருக்குள் நாட்டப்பட்டது? முதன்முதலாக ஜீவன் எந்தப் பொருளிலிருந்து உற்பத்தியானதோ, அதே மூலப் பொருளி லிருந்துதானா இந்த ஆன்மாவானது தோன்றலானது? உயி ருள்ள பொருள்களான ஒரு புழுவாக நெளியும்பொழுதா, அல் லது ஒரு மீனாக நீந்தும்பொழுதா, அல்லது தரையிலும், நீரிலும் வாழக்கூடிய ஓர் பிராணியாக ஜீவித்திருக்கும்பொ ழுதா இந்த ஆன்மாவானது காட்டப்பட்டது? முதன் முத லாகத் தோன்றிய முலையுண்ணும் ஜீவவர்க்கத்திற்கா இது அருளப்பட்டது? அல்லது உயர்ந்த வாலில்லாக குரங்குக்

கா இது கொடுக்கப்பட்டது? கொடூரமும் மூர்க்கத்தனமும் நிறைந்த பூர்வ மனிதனுடைய குறுகிய கபாலத்திற்குள்ளா இது திணித்துவைக்கப்பட்டது? அல்லது மனிதன் நாளாக நாளாக, நாகரீகத்துறையில் முன்னேறிக்கொண்டே சென்று கொண்டிருக்கும்பொழுதா இந்த ஆன்மாவானது அழிவில்லாமலும், நாசமில்லாமலுமிருக்கக்கூடிய சக்தியை அவனுக்கு அனுக்கிரகிக்கப்பட்டது?

பூர்வகாலங்களில், மனிதன் ஓர் விசேஷித்த சிருஷ்டிப்பினுல் பிறப்பிக்கப்பட்டவன் எனவும், சிருஷ்டிக்கும் தன்மை வாய்ந்த ஓர் கடவுள், ஒரு குயவனைப்போல் அவனுடைய உருவத்தை முதன்முதலாக களிமண்ணுல் உண்டாக்கி, ஜீவியத்தின் உயிரை அவனுடைய நாசித்துவாரத்தின் வழியாகப் புகட்டினுர் எனவும் கூறப்பட்டுவந்ததை உண்மையெனவே மக்களால் நம்பிக்கொண்டுவரப் பட்டபொழுது, அவனுடைய இந்த ஆன்மாவானது யாதொருவித அழிவும், நாசமுமின்றி, எப்பொழுதுமே ஜீவித்திருக்கக் கூடிய தன்மை வாய்க்கப்பெற்றதெனவும் சுலபமாகவே மக்களால் நம்பப்பட்டுவந்தது. ஆனுல் இந்த உலகில் நாம் ஜீவித்திருக்கக்கூடிய நாட்கள் சில எனவும், மிக்க உயர்ந்த உருவமானது மிகவும் தாழ்மையான உருவம் வளர்ச்சியில் அதிகரித்தநிமித்தம் உண்டாக்கப்பட்டதெனவும், ஓர் பரமாணுமுதல் மனிதன் வரையிலும் நெருங்கிய சம்மந்தமுண்டென்பது சர்வவியாபகமாகக் காணப்பட்டுக்கொண்டு வருகின்றதெனவும் நாம் உணர்ந்தும், அறிந்துமிருக்கக்கூடிய இந்த நாட்களில், மனுஷீகத் தன்மைக்கும், மனுஷீகத் தன்மையல்லாததற்கும், இடையில் ஒரு அணையோ, அல்லதுஒரு வேலியோ எங்கு இருக்கக்கூடுமென திட்டமாயும், உறுதியாயும் உரைக்கவே முடியாது. ஏனெனில், ஜீவன் பிரசித்

தப்படுத்தப்பட்டபொழுது மிருகத்திலிருந்து மனிதன் எந்த இடத்தில் தோன்றினனென்றோ, அல்லது எப்பொழுது உற்பவித்தானென்றோ ஒருவராலும் சொல்லவே முடியாது. ஆகையினலே, ஆன்மாவின் அழிவில்லாத் தன்மையானது ஆதிகாலத்தில் நம்பப்பட்டு வந்ததுபோலா, இக்காலத்தில் நம்பப்பட்டுவருவதானது மிகவும் அரிதாகிவிட்டது.

மக்களின் ஆன்மாக்கள், அவரவர்களுடைய புண்ணியங்களுக்கும், பாவங்களுக்கும் தகுந்தாற்போல் ஒன்று அதிகமாகவோ, அல்லது குறைந்ததாகவோ தாழ்த்தப்படுத்தப்பட்ட மிருக வகைகளாகவோ, அல்லது ஆண்டி முதல் அரசன் வரையிலுமுள்ள பல்வேறு நிலைமைகளிலும் மீண்டும் மனிதர்களாகவோ, அல்லது தெய்வங்களாகவோ அவதரித்துக்கொண்டே தான் வருகின்றதென்பதாக பிராமணர்களும், பௌத்தர்களும் நம்பிக்கொண்டு வருகின்றனர்கள். ஆனல் மக்கள் பிறவியிலும், மிருகப் பிறவியிலும் உயர்வு—தாழ்வை உற்பத்திசெய்துகொண்டுவரும் ஜன்மாந்தரம், கர்மம், மறுஜன்மம் ஆகிய இந்தத் தத்துவங்கள்கூட, ஆன்மாவின் உற்பத்தியைக் குறித்தாவது, அல்லது அதனுடைய தன்மையைக் குறித்தாவது ஒன்றுமே உபதேசிக்கின்றதில்லை. சாக்கியமுனி என்பவர் ஒரு மீனகவும், ஒரு தவளையாகவும், ஒரு சந்நியாசியாகவும், ஒரு யானையாகவும், ஒரு வாலில்லாக் குரங்காகவும், ஒரு அரசராகவுமாக சுமார் ஐநூற்று ஐம்பது தடவை பல்வேறு ஜன்மங்களாக அவதரித்து, கடைசியாகத் தான் புத்தராகத்தோன்றினர் என பௌத்தர்களால் நம்பப்பட்டு வரும் இந்தத் தத்துவமானது உண்மையாகவே இருக்கும் பக்ஷத்தில், பௌத்தர்கள் யாவரும் சர்வமும் நாசமான ஓர் நிலைமையை அடைய வேண்டுமென விரும்பி, அதற்காக தவம் செய்துகொண்டு

வருவதைப் பார்த்து நாம் ஆச்சரியப்படவேண்டிய அவசிய மேயில்லை. ஒருவனுடைய ஆன்மாவானது, மறு ஜனனத்தில் ஓர் சிறிய பல்லியின் சரீரத்திலும உட்புகுந்து, வாசஞ் செய்யக்கூடிய தன்மை வாய்க்கப்பெற்ற தென்னும் நம்பிக்கையானது, ஒருவனுக்கு எத்தகைய மன ஆருதலையும், மன நிம்மதியையும் அளிக்கவே யளிக்காது. ஆனால், மரணத்திற்குப் பின் சாஸ்வதமானதும், முடிவற்றதுமான ஓர் சூனியமான நிலைமையே உண்டாகின்ற தென்னும் தூரக்காக்ஷியானது மேலே குறிப்பிடப்பட்ட நிலைமையைக்காட்டிலும் எத்தனையோ மடங்கு உயர்வானதும், மேலானதுமாகும்.

மறு ஜனனம் உண்டு என்னும் தத்துவத்தின் நம்பிக்கையை, தற்காலத்தில் ஆமோதித்து, அங்கீகரித்த விஞ்ஞான சாஸ்திர நிபுணர்களில் சர் ஆலிவர் லாட்ஜ் (Sir Oliver Lodge) என்பவரும் ஒருவராவர். மரணத்திற்குப்பின் மனிதன் மீண்டும் உயிர்பெறறு, எழுந்திருகின்றுனெனக் கூறப்பட்டு, பழக்கத்திலிருந்து வரும் கொள்கையானது ஓர் மூடப் பழக்க வழக்கந்தானுகுமெனக் கூறி, அந்தக் கொள்கையை அகற்றியேதான் தீரவேண்டுமென போதித்துக்கொண்டுவரும் சர் ஆலிவர்லாட்ஜ், இந்த ஆன்மாவின் நாசமற்ற நிலைமையில் மட்டும் இன்னும் நம்பிக்கைவாய்ந்தவராக இருந்துவருவதுடன், அக்கொள்கையை விடாப்பிடியாகவும் பிடித்துக்கொண்டிருக்கின்ருர். அவரால் எழுதப்பட்ட "விஞ்ஞானமும், அழியாமையும" (Science & Immortality) என்னும் நூலில், "நம்முடைய தனிப்பட்ட அபிப்பிராயங்களை வெளியிடப்படக்கூடியதன்மையை ஆக்ஷிபுரிந்து அதை நடாத்திக்கொண்டு வரக்கூடியதும், சரீர இயல்பிற்கும், சந்ததியின் நிலைமைக்கு மேற்றுப்போல் கட்டுப்பட்டு, தேகத்தை அமைத்துக்கொண்டுவருவதற்கும் பொறுப்புவாய்ந்த ஓர் சூத்திரமாகு"மென

ஆன்மாவை வியாக்யானம் செய்து அவர் குறிப்பிட்டுவிட்டு, இந்தத்தத்துவமானது "வாழ்க்கையின் தத்துவத்துடன் ஐக்கியப்பட்டிருப்பதுபோல் காணப்படுகின்றதென"வும் எடுத்துரைக்கின்றார். துர்பாக்கியவசமாக, இந்த வியாக்யானமும், விரிவுரையும் அளவுக்கு மீறியவைகளை உள்ளே அடக்கிக்கொண்டிருக்கின்றது. இந்த வியாக்யானமானது எல்லாமிருகவர்க்கங்களையும், தாவர வர்க்கங்களையும் எவ்வாறு உள்ளே அடக்கிக்கொண்டிருக்கின்றதோ, அவ்வாறேதான் மனிதவர்க்கத்தையும் கூட உள்ளே அடக்கிக்கொண்டிருக்கின்றது. பரம்பரையான தத்துவத்தையும், சுற்றிலும் காணப்படுபவைகளையும் அனுசரித்துத் தோற்றுவிக்கப்பட்ட மக்களின் ஜீவியம் சதா-அதாவது எப்பொழுதும், ஜீவித்துக்கொண்டு, உயிருடன் வாழ்ந்து வருவதாகயிருந்தால், அப்பொழுது விஷத்தையுடைய கொடியை உருவகப்படுத்திய கொள்கையும், அல்லது காடுகளில் வாசம் செய்துகொண்டிருக்கின்ற மிருகங்களின் தத்துவமும் இத்தகைய காரணத்தைக் கொண்டும், இதே பிரமாணங்களின் காரணத்தைக் கொண்டும் நாசமில்லாமலும், அழிவில்லாமலும், எப்பொழும் ஜீவித்துக் கொண்டிருக்கவேண்டும். சர் ஆலிவர் லாட்ஜ் அவர்களின் சித்தாந்தப்படி, "உயிருள்ள எல்லாப் பொருள்களுக்கும், ஏதாகிலும் மூலாதாரமான ஆன்மா அவசியமிருந்தேதான் தீரவேண்டு"மென ஏற்படுகின்றது. இத்தகைய மறுப்பு ஒன்று ஏற்பட்டு, அதனால் தம்முடைய நிலைமையானது எப்பொழுதாகிலும் பாதிக்கப்படக்கூடும் என்பதை செவ்வனே உணர்ந்துகொண்ட அவர், "நல்லது, ஒரு உருவகப்படுத்தப்பட்ட வாழ்க்கைக்கும், மற்றொருவித வாழ்க்கைக்கும் உள்ள வித்தியாசங்களை, என்னைப்பொறுத்தவரையிலும், என்னால் திட்டமாயுரைக்க முடியா"தென அவர் அழுத்தந்திருத்த

மாக உரைக்கின்றார். ஆகையினாலே, கீர்த்தியும், புகழும் வாய்ந்த அந்த விஞ்ஞான சாஸ்திர நிபுணரானவர், நாசமா காமலும், அழிவுறாமலுமிருக்கக் கூடிய அந்த மிருகங்களின் ஆன்மாக்களுடன் தாமும் கலந்து, அவைகளுடன் ஒன்றாகச் சேர்ந்து, அவைகள் அநுபவிக்கும் பேரானந்தத்தைத்தாமும் அனுபவிக்க தம்முழுமனதுடன் சம்மதிக்கின்றாரென ஏற்படு கின்றது. உலகம் தோன்றியநாள் முதற்கொண்டு, இந்த பரந்த உலகில் அங்கும், இங்குமாக நடமாடி, பிறகு மாண்டு, மரி த்துப்போன மிருகங்களினுடைய ஆத்மாக்களின் கூட்டுறவி னாலும், சமுத்திரத்திலும், பூமியின் மீதும், ஆகாயத்திலும் வாசம் செய்த, ஆச்சரியத்தையும், பயத்தையும் ஒருங்கே விளைவிக்கத்தக்க தோற்றத்தினையுடைய இயற்கைக்கு விரோதமான விலங்குகளினுடைய ஆன்மாக்களின் சினேகி தத்தாலும், உயிருடனிருக்கக்கூடிய ஜந்துக்களை அப்படியே பிடித்து, ஆகாரம் செய்பக்கூடியவைகளும், விஷப்பைகளையும், கூரிய நகங்களையும் தங்களுக்கு ஆயுதமாக உபயோகிக்கும் சிறிய பல்லி முதல் பெரிய இராஜாளி வரையிலுமு ள்ளவைகளின் ஆன்மாக்களின் சம்மந்தத்தாலும், உலக சரித்திரம் உற்பத்தியாவதற்கு முன் காணப்பட்டும், ஆனால், இப்பொழுது காணப்படாததும், இயற்கை க்கு முற்றிலும் முரண்பாடுடையதுமான மிருகங்க ளின் பெரிய, பெரியஎலும்புக்கூடுகள் தற்காலம் கண்காக்ஷி சாலைகளில் வைக்கப்பட்டு, நமக்கு ஆச்சரியத்தையும், வியப் பையும் ஒருங்கே விளைவித்துக்கொண்டு வரக்கூடிய அந்த மிருகங்களின் ஆன்மாக்கள் முதற் கொண்டு, அதிருஷ்டமற்ற ஜந்துக்களைத்தங்களுடைய மெல்லிய உடல்களால்சுற்றி, அவை களை நெறுக்கி, அவைகளின் உயிரை வாங்கிவிடக்கூடிய சக்தி யும், தன்மையும் வாய்ந்த விஷமுள்ள பெரிய பாம்புகள் வரையிலுமுள்ள ஆன்மாக்களின் நெருங்கிய உறவினாலும்,

சம்பந்தத்தினுலும் நமக்கு உண்டாகக்கூடிய அந்த எல்லையற்ற பேரின்பசாகரத்தின் பரவசத்தை நீங்களே சிறிது சிந்தித்துப்பாருங்கள்! இத்தகைய ஓர் சுவர்க்கத்தை அணுகி, அதில் வாசம் செய்ய, மக்களில் ஒரு சிலரேதான் ஆசைப்படுவார்களென்பதில் சிறிதும் சந்தேகமேயில்லை.

மேலும், சர் ஆலிவர் லாட்ஜ் என்பவருக்கு மனம் விடுதூது (Telepathy) தோற்றங்கள் (Visions) கனவுகள் (dreams), புலன்களுக்கு எட்டாதவைகளைக் காணும் திருஷ்டி [Clairvoyance), ஸ்தூல வடிவங்கள் (Materializations) ஆகியவைகளிலும் மரணத்திற்குப் பிறகு ஜீவன் தொடர்ச்சியாகவே இருந்து தான் வருகின்றதென்னும் உண்மையை நிரூபிப்பதற்காகக் கையாளப்பட்டு வரும் ஆன்மா சம்மந்தத்தைப்பற்றிய கொள்கைகள் என நம்பப்பட்டு வரும்படியான தத்துவங்களிலும் திடமும், உறுதியுமான நம்பிக்கையுண்டு. கீர்த்திவாய்ந்த அந்த சடத்துவ சாஸ்திரியானவர் மானத பூசையில் திடமான பக்திகொண்ட ஓர் உண்மை வாய்ந்த பக்தனுகையிருந்து வந்ததுடன், அதைப்பற்றி மிகைப் படக் கூறப்பட்டு வந்த அதன் உரிமைகளனைத்தையும், அப்படியே யாதொரு வித சந்தேகமுமில்லாமல் தம் மனப்பூர்வமாகவும், பரிபூரணத் திருப்தியுடனும், இன்பத்துடனும் ஒத்துக்கொள்ளக்கூடிய வருமாவார். ஆனல் மனம் விடுதூது (Telepathy) எனக் கூறப்பட்டு வரப்பட்டதானது—அதாவது ஒருவருடைய மனதில் உதிக்கக்கூடிய எண்ணங்களை யாதொருவிதமான இந்திரியங்களினுடைய உதவி யென்பது கிஞ்சிற்றுமின்றி, அப்படியே இன்னொருவருடைய மனதில் உதிக்கும்படியாகச் செய்வதானது—ஒரு முகாந்திரத்தில் கூட இன்னும் நிரூபிக்கப்படவே இல்லை. அதை உண்மையென நிரூபிப்பதற்காக வேண்டி செய்யப்பட்ட விஞ்

ஞான சாஸ்திரத்தின் ஒவ்வொரு பிரயத்தினமும் வீண் பிரயத்தினமாகவே தான் முடிந்தது. ஆனால் இந்த மனம் விடு தூது (Tele pathy) விஷயமானது யாதொரு விதமான சந்தேகங்களுக்கும் சிறிதும் இடமின்றி, அதில் கூறப்பட்டுள்ள அனைத்தும் உண்மையைத் தவிர்த்துப் பிறிதொன்றுமில்லையென உண்மையாகவே நிரூபிக்கப்படுமானால், அப்பொழுது அது மூளையின் சக்தித்துறையில் அதாவது மூளையைக்குறித்த விஷயங்களிலும், அதனுடைய சக்தியை அனுசரித்தத்துறையிலும்—நாம் எவ்வளவுதூரம் முன்னேறிக்கொண்டே வந்திருக்கின்றோமென்பதையேதான் நிரூபிக்கும்.

சரீரத்தின் அழிவிற்குப்பிறகு நாம் தொடர்ச்சியான சுய அறிவுடன்தான் விளங்கிக்கொண்டு வருகின்றோமென்பதை மட்டும் அது எத்தகைய முகாந்திரத்தைக் கொண்டும், அக்காலத்திலும் நிரூபிக்க அதனால் முடியவே முடியாது. மனிதனுடைய சுய அறிவு என்னும் திரையானது அவனுடைய பரிபூரண நித்திரை என்னும் நிலைமைக்கேற்றவாறு சரிவர இழுக்கப்படாதிருக்கும் பொழுது, அவனுடைய மனம் தான்கண்டமனோ சாயல்களின் வழியே அலைந்து, திரிந்துகொண்டிருக்கின்றது. இவைகளைத்தான் நாம் கனவுகளென்பதாகக் கூறிக்கொண்டு வருகின்றோம். தோற்றங்கள் (Visions) யாவும் பகற்கனவுகளேயாகும்—அதாவது மனப்பிரமையேயாகும். இன்னும் சற்று விளக்கமாக இதை உரைக்கவேண்டுமேயானால், அப்பொழுது இதை மனோகற்பனை என்னும் சுவர்களில் தொங்கவிடப்பட்டிருக்கும் படங்கள் யாவும் சூனியமான ஆகாயத்தில் நீட்டிக்கொண்டிருக்கப்பட்ட காக்ஷியின் தோற்றமெனவேதான் கூறவேண்டும். வீண் எண்ணங்களுடனும், நம்பிக்கைத்துரோகசிந்தையுடனும் உரு

வாக்கப்பட்ட இந்தக்கனவுகளும், இந்தத் தோற்றங்கள் யாவும் மூளைக்கு உள்ளாகவேதான் உற்பவித்து, வெளியே தோன்றியபோதிலும்கூட, மரணத்திற்குப்பிறகு நாம் மீண்டும் உயிர்பெற்று, ஜீவித்துக்கொண்டுதான் வருகின்றோமென்னும் தத்துவத்தை உண்மையென்பதாக நிரூபிக்கப் போதிய சக்தியுடன் விளங்குவதாகக் காணப்படவில்லை. புலன்களுக்கு எட்டாதவைகளைக் காணும் திருஷ்டியைப் (Clair-voyance) பொறுத்த வரையிலும், உயிருடன் வாழக்கூடிய எதாகிலும் ஓர் சில மனிதர்கள் அறிந்துகொள்ளாததைப் பற்றியாவது, அல்லது அவர்களுக்கு விளங்காதிருந்ததைப் பற்றியாவதுள்ள விஷயங்களைக் குறித்து மானதபூசையின், உபகரணங்கள் எனக்கூறப்பட்டுவருபவர்களால் உலகில் வாழும் மக்களுக்கு நாளதுவரையிலும் விளக்கமாக எடுத்துரைக்கப்படவில்லை என உரைப்பதானதே போதுமானதாகும்.

இருளில் ஆத்மதரிசனமேடைகளில் நடைபெறக்கூடிய மானதபூசைகளில், அப்பூசையின் உபகரணஸ்தர்களின் கட்டளைக் கிணங்கியும், உத்திரவுக் குக்கீழ்ப்படிந்தும், ஆன்ம உலகிலிருந்து ஆவிகள் தோன்றுவதையே, ஸ்தூலவடிவங்களையுடைய ஆன்மாக்களின் எதிர்கால வாழ்க்கைக்குத்தக்க சான்றாகுமென்பதாக சர் ஆலிவர் லாட்ஜ் உரைக்கின்றார். ஆனால், இந்த இடத்தில்தான் விஷயங்கள் நம்மை தாமதித்து நிற்கும்படி செய்து யோசனைசெய்ய வற்புறுத்துகின்றன. முதலாவதாக, இந்த ஸ்தூலவடிவங்களையுடைய ஆன்மாக்கள் யாவும்—இதர எல்லா ஆவிகளைப்போலவே—உடைதரித்துக்கொண்டிருப்பதாகவே எப்பொழுதும் காணப்படுகின்றன. இவ்விஷயமானது சாமான்யவிஷயமாகமாட்டாது. எவ்வாறெனில், உடைதரித்துக்கொண்டு, காணப்படக்கூடிய ஒரு ஆன்மாவை ஒரு சமயம் உயிருள்ள மனிதனாகவுமிருக்கக்கூடுமோ

எனநாம்சுலபமாகவும், தப்பிதமாகவும் நினைக்கக்கூடும். இரண்டாவதாக, மானத பூசைசெய்பவர்களின் உபகரணஸ்தர்களால் உற்பத்திசெய்யப்படக்கூடிய, நல்ல சுகமான தோற்றத்தையும், திட ஆரோக்யத்தையும் வாய்ந்த ஸ்தூலவடிவங்களைத் தாங்கிய ஆன்மாக்களைப்போலவே, மாந்திரீகத்திலும், இந்திர ஜாலவித்தையிலும் கீர்த்திவாய்ந்த இங்கிலாந்து தேசத்து வாசியாகிய தோழர். மாஸ்கிலீன் [Maskelyne] என்பவர் சிருஷ்டி செய்து காண்பிக்கின்றார். மூன்றாவதாக, ஸ்தூல வடிவங்கள்தான் எனக்கருதப்பட்டுவந்த இந்த உருவங்களை ஆண்மையும், திடமும், அதிநுட்பமான அறிவும் வாய்ந்தவர்கள் பிடித்து, சோதனை செய்து பார்த்தபொழுது, மானத பூசை புரிபவர்களின் உபகரணஸ்தர்கள் எனக்கூறப்பட்டு வந்தவர்களும், ஸ்தூல வடிவங்களுடன் விளங்கிய ஆன்மாக்களின் உருவங்களும் ஒன்றே என்பதாகவும், ஒரே மனிதன்தான் என்பதாகவும் தெளிவாகவும், ஸ்பஷ்டமாகவும்எல்லோருக்கும் விளக்கிக்காண்பித்திருக்கின்றார்கள்.

சர் ஆலிவர் லாட்ஜ் என்பவரால் எழுதப்பட்ட "ரெய்மண்டு" (Raymond) என்னும் நூலில், 1915ம் வருட யுத்தத்தில் கொல்லப்பட்ட தமது மகன் ரெய்மண்டு என்பவருடைய ஆன்மா வால் அறிவிக்கப்படலான வர்த்தமானங்களென்பதாகக் கருதப்பட்ட சில செய்திகளை அவர் உலக மக்களுக்கு வெளியிட்டிருக்கின்றார். மானத பூசையின் உபகரண ஸ்திதியாகிய ஒரு மிசிஸ் லினார்டு (Mrs. Leonard) என்னும் அம்மையாரால் இவ் விஷயங்கள் தமக்கு அருளப்பட்டதாகவும், அந்த ஆன்மா உலகில் அவ் வம்மையாருக்கு வழி காட்டியாக இருந்தவர் பீடர் (Feda) என்னும் பெயர் வாய்ந்த ஓர் இந்தியச் சிறுமி என்பதாகவும், ஆன்ம உலகில் சஞ்சரிக்கும்படியான இந்த ஆவிகளுக்கு நமது தேகங்களைப் போல

வே உடல்களும், அவயவங்களும்—அதாவது கரங்கள், கால்கள், கண்கள், காதுகள், நாக்கு, பற்கள் ஆகியவைகள் யாவும்—இருந்து வருவதாக இத்தகைய வர்த்தமானங்களால் அறியப் படுகின்றது. இந்த ஆவிகள் யாவும், மேலும், உடைகளையும் தரித்துக் கொண்டிருக்கின்றதாம் ரெய்மண்டு என்பவரின் ஆன்மா கம்பனியால் செய்யப்பட்டதும், சிதைந்துபோயிருக்கக்கூடியதுமான உடையை அணிந்துகொண்டிருந்ததாம்! அந்த ஆன்மா வசித்துக்கொண்டு வந்த வீடானது செங்கல் கற்களால் கட்டப்பட்டதாம்! அந்த ஆன்ம உலகில், மேலும், கருங்கற்கள் கூட உண்டாம்! அவ்விடத்தில் இரசாயன சாலைகளும், பௌதீகப் பரீக்ஷண சாலைகளும் உண்டாம்! அவ்விடத்தில் எல்லாவிதமான சாமான்களும் உற்பத்தி செய்யப்படுகின்றதாம்! ஆன் மாக்கள் சுருட்டுப் புகைப்பதற்காக வேண்டி அவ்விடம் சுருட்டுகள் உள்பட செய்யப்படுகின்றனவாம்! மேலும், ரெய்மண்டு என்பவர் மாமிசம் வேண்டுமென சில ஆவிகள் உரைக்கின்றன எனவும் அதிகப்படியான மயக்கத்தை உண்டாக்கக் கூடிய பானவகைகளை வேறு சில விரும்புகின்றன எனவும், சில ஆன்மாக்கள் உஸ்கியும் சோடாவும் கேட்கின்றன எனவும் இந்த ஆன்மாக்கள் யாவும், அந்த உஸ்கியையும், சோடாவையும் கூட இவ்விடத்திலேயே உற்பத்தி செய்து கொள்ளுகின்றன எனவும் நான் உரைக்கும் பொழுது, நான் பொய்யை உரைப்பதாக நினைக்கவே வேண்டாம் என உரைக்கின்றார். புகைத்தலும், சாப்பிடுதலும், உஸ்கியும், சோடாவும் குடித்ததுமாகிய காரியங்கள் நடைபெறக்கூடிய இந்த இடந்தான், மக்கள் கம்பெனியால் செய்யப்பட்ட உடைகளை தரித்துக்கொண்டும், செங்கல்கற்களால் கட்டப்பட்ட வீடுகளில் வாசம் செய்துகொண்டும் வரக்

கூடிய இந்த இடந்தான் மாமிசப்பசையற்ற ஆவிகள் வாசம் செய்யக்கூடிய இடமாம்! கிறிஸ்து மதத்தின் கோட்பாடுகளை யும், நியம விதிகளையும் மீறி, அவைகளைக் கடந்து அப்பால் சென்றவரும், விஞ்ஞான சாஸ்திரத்தில் புகழும், கீர்த்தியும் வாய்ந்தவருமான அந்த சர் ஆலிவர்லாட்ஜ் மூடப்பழக்கவழக் கம் என்னும் அஸ்திவாரத்தின்மீது கட்டப்பட்ட, மானத பூஜை என்றுகூறப்பட்டு வரும்படியான கோவிலுக்குள் பிர வேசித்து, முழங்கால் மண்டியிட்டு, பிரார்த்தனை செய்துகொ ண்டு வருவதுடன், கீர்த்திவாய்ந்த அவருடைய பெயரால் இம் மாதிரியான அபத்தமானதும், ஆபாசமானதுமான விஷயங் களை வெளியிட்டு, அவைகளைச் செவிகொடுத்துக் கேட்பவர் களின் வாயில் நீரொழுகும்படியாகவும் செய்துவருகின்றார்.

மானத பூஜைக்குச் சம்மந்தப்பட்ட கலைஞானத்தின் நச் சுக்காற்று அளவுக்கு மீறி பிரசித்தப்படுத்தப்பட்டிருப்பதனு லும், சிறந்த விவேகத்தையும், மனோசக்தியையும், கற்பனு சக் தியையும், கவிவன்மையையும் அடையப்பெற்று, மாண்டு, மரி த்துப்போனவர்களின் பெயர்களால் வெளியிடப்படும் வர்த்த மானங்கள் யாவும் அளவுக்கு மீறிய மூடத்தனம் நிறையப் பெற்று, சூனியமாயும், அபத்தமாகவும், பொய்யாகவும் விளங்குவதனுலும், ஆன்ம உலகத்தை வர்ணித்து, சித்தரித் திருக்கக்கூடிய படமானது, அப்படத்தைக் கண்ணுறக் கூடியவர்களின் மனதைக் கவர்ச்சிசெய்ய முடியாத நிலைமையி லிருந்து வருவதனுலும், அந்தச் சிறந்த புருஷராகிய ஹக் ஸ்லி [Huxley] என்பவர் "மானத பூஜையின் உண்மைத் தத் துவத்தை விளக்குவதற்காகக் கையாளப்பட்ட முறைகளி னின்று ஏற்பட்ட ஒரே நன்மை என்னவென்றால், மக்கள் தங்களைத் தாங்களே தற்கொலைசெய்து கொள்ளுவதினின்றும்

தடுக்கப்பட வேண்டிய அவசியத்திற்கு மற்றும் ஓர் அதிகப் படியான நியாயத்தை சேகரித்து அளித்ததே யாகுமென"க் கூறித்தீரவேண்டிய நிலைமைக்கு இக்கேள்வியானது அவரைக் கொண்டுவந்து விட்டுவிட்டது.

மாமிசப் பசையற்ற ஆன்மாக்களால் தான் இத்தகைய வர்த்த மானங்கள் வெளியிடப்பட்டதாக எந்தக் காலத்திலும், தக்க ஆதாரத்துடனாவது ஜவாப்புதாரித்தனத்துடனாவது விஷயங்கள் வெளிவரவே இல்லை. ஆன்மாக்கள் வாசம் செய்யுமிடத்தைக் கண்டுபிடிப்பதற்காக, விஞ்ஞான சாஸ்திரத்தின் மூலம் செய்யப்பட்ட ஒவ்வொரு முயற்சியும் நம்மை ஏமாற்றமடையும்படியாகவே செய்துவிட்டது. ஆத்ம தத்துவத்தை ஆராய்ச்சி செய்து பார்ப்பதில் மிக்க வைராக்கியமும், ஊக்கமும் வாய்ந்த தோழர் எப். டப்ளியு. எச். மையர்ஸ் (F. W. H. Myers) என்பவர், ஒரு கடிதம் எழுதி, அதை அநேக உரைகளில் அடக்கம் செய்து, அவைகளின் மீது அரக்கு முத்திரையிட்டு, தாம் இறந்த பிறகு உபகரணஸ்தர்களின் மூலமாக அக் கடிதத்தில் எழுதி இருக்கப்பட்ட விஷயங்களை ஆன்ம உலகிலிருந்து வெளியிடுவதாக உரைத்து, அந்த அரக்கு முத்திரையிடப்பட்ட உரையைத் தம்முடைய பாங்கிக்காரர்களிடமளித்து, பத்திரமாய் வைத்திருக்கும்படியாக உரைத்து, இறந்துபோனார். ஆனால், மிசிஸ். வெரல் (Mrs. Verrall) என்னும் மாது 1905ம் வருஷத்தில்—அதாவது அக்கடிதம் எழுதப்பட்டு பதினான்கு வருடங்கள் சென்ற பிறகு—தோழர் மையர்ஸ் என்பரால் இவ்வுலகில் அவர் உயிருடன் ஜீவிக்கும்பொழுது விட்டுச் செல்லப்பட்ட கடிதத்தில் உள்ள விஷயங்கள் இவைகள் தான் எனத்தாம் நம்புவதாகவும், அவ் விஷயங்கள் தமக்குத்தோழர் மையர்ஸ் என்பவருடைய ஆவியால் அருளப்பட்டதாகவும், அவ் விஷயங்கள்

தாலுகவே எழுதப்பட்டு, தமக்குக் கிடைத்ததாகவும் உரைத்து, ஓர் கடிதத்தைக் கொடுக்க, ஆத்ம தத்துவ ஆராய்ச்சியாளர்களின் சங்கத்தார் ஓர் விசேஷித்தக் கூட்டத்தை இதற்காகவே கூட்டி, அந்த இரண்டு கடிதங்களிலும் காணப்படும் விஷயங்களை ஒத்திட்டுப் பார்க்கும்பொழுது, ஒன்றுக்கொன்று முற்றிலும் பேதமுள்ளதாகவும், வேற்றுமையுள்ளதாகவுமிருப்பதையே தான் அறிந்தார்கள். மேலும், சிலேட்பலகையில் எழுதுதல், ஆவியைப் படம் பிடித்தல், மேஜையின் மீது சம்மட்டியாலடித்தல் போன்ற காரியங்களையும், ஆன்ம உலகின் காக்ஷிகளெனக் கூறப்பட்டு வரும்படியானதும், கரங்களினுதவியைக்கொண்டு செய்யப்பட்டு வரலான இன்னும் இதர ஆவிப்படங்களையும் பல்வேறு முறைகளைக்கொண்ட தந்திரங்களினுதவியைக்கொண்டு நம்மால் சுலபமாகவும், வெற்றிகரமாகவும், செய்து முடிக்க முடியுமென்பதை நாம் நமது மனதில் அழுத்தந்திருத்தமாகப் பதியவைத்துக்கொள்ளவேண்டும்; "ஆவியின் தூது" அல்லது "ஆவியின் சங்கதி" எனக்கூறப்பட்டு வருவதை இறந்துபோன மனிதனிடமிருந்து பெறப்படுவதைக்காட்டிலும் உயிருள்ள மனிதனிடமிருந்து நாம் அதிக சுலபமாகவே பெற முடியும்—யாருடைய ஆவி பேசப்படுகின்றதாகக் கருதப்படுகின்றதோ, அந்த ஆவிக்குறிய மனிதன் இறந்து போய்விட்டதாகவே நமக்கும், ஆன்ம உலகிற்கும் இடையே உள்ள உபகரணஸ்தர்களெனக் கூறப்பட்டு வருபவர்கள் நினைத்துக்கொள்ள வேண்டியதே இந்தச் சந்தர்ப்பத்தில் இன்றியமையாததாகும்; ஆன்ம உலகிற்கும், நமக்கும் இடையே விளங்கிய பேரும், புகழும் படைத்த உபகரணஸ்தர்கள் யாவரும், பாக்ஸ்சகோதரிகள் (Fox Sisters) முதல் ஈசோபியா பல்லாடினு (Eusapia Palladino) வரை, யாவருமே புரட்டுக்காரர்களெனவும், கபடஸ்தர்களெனவும், சூது

ள்ளவர்களெனவும், வஞ்சனையுள்ளவர்களெனவும், பித்தலாட்டக்காரர்களெனவுமேதான் பகிரங்கப்படுத்தப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டார்கள். ஆகையினாலே, "விஞ்ஞானத்துறையிலீடுபட்டுள்ள சாஸ்திரிகள் யாவருமே இந்த விஷயத்தைக்குறித்து, தற்காலம் அறியாதிருந்து வருகின்றார்கள். ஏனெனில், இந்தவிஷயமானது தந்திரமாகத்தப்பித்துக்கொள்ளக்கூடியதாகவும், ஏய்க்குந்தன்மை வாய்ந்ததாகவுமேகாணப்படுகின்றது" என சர் ஆலிவர் லாட்ஜ் என்பவர் ஒத்துக்கொண்டு, அறிக்கைவெளியிட்டதைப்பற்றி ஒருவரும் ஆச்சரியப்படவேண்டிய அவசியமேயில்லை.

ஆனால், மானத பூஜையில் ஏதாகிலும் வியப்போ அல்லது ஆச்சரியமோ இல்லையா? இருப்பதாகவே ஒத்துக்கொள்ளுவோம். பிறரை மயக்கி, அவர்களை நித்திரை மயக்கத்திலேயே ஆழ்ந்திருக்கும்படியாகச்செய்வதற்குக்கையாளப்பட்டமுறைகளிலும்—அதாவது ஹிப்நாட்டிசம் எனக்கூறப்படுவதிலும்கூட—வியப்பும், ஆச்சரியமும் இருக்கத்தான் செய்கின்றது. "மானத பூஜை செய்பவர்கள் எத்தகையச் செயலை, ஆன்ம உலகில் வசிக்கும்படியான ஆவிகளினுடைய ஆவிர்ப்பலம் என்பதாக உரைக்கின்றார்களோ அது,—ஆன்ம உலகுக்கும் நமக்கும் இடையே இருக்கும்படியான உபகரணஸ்தர்களின் மனம் பாதி உணர்ச்சியுடனிருக்கும்பொழுது—அதாவது பிரக்ஞை தவறி இருக்கும்பொழுது—அவர்கள் பரவசப்படுவதாக, மிக்கத்தீவிரமாகக் காண்பித்துக்கொள்ளுவதினால் ஏற்படக்கூடிய நிலைமையேதான் அவர்களுடைய அத்தகையச் செயலுக்குக் காரணமாகு"மென்பதாக, ஹிப்நாட்டிசத்தில் புகழ்வாய்ந்த டாக்டர். J. மில்னி பிராம்வெல் (Dr. J. Milne Bramwell) என்பவர் உரைக்கின்றார். ஆன்ம தத்துவ ஆராய்ச்சித் துறையில் நிபுணரான

தோழர். பிரேன்க் பாட்மோர் (Frank Podmore) என்பவரும் இந்த அபிப்பிராயத்தையே ஒப்புக்கொள்ளுகின்றார்.

171634

மனம் எனக்கூறப்பட்டு வருவதானது, ஒரு சமயம், மூளையிலுள்ள புறம்பான ஓர் உண்மைப் பொருளாகவே இருக்கக் கூடுமென பிரபசர் வில்லியம் ஜேம்ஸ் (Professor William James) என்பவர் எண்ணிக்கொண்டு வந்ததற்கு மாறாகவே, அவருடைய மரணத்திற்குப்பிறகு வெளியிடப்பட்ட "ஞாபகமும், கல்வியும்" (Memories and Studies) என்னும் அவருடைய புஸ்தகத்தில், மனிதன் இறந்தபிறகு அவருடைய ஆன்மவானது அவனுடைய தேகத்தின் கூடவே மடிந்து விடுகின்றதா? அல்லது மனிதன் இறந்த பிறகு அவனுடைய ஆன்மாவானது உயிருடனேயே ஜீவித்துக் கொண்டிருக்கின்றதா? என்னும் விஷயத்தை அவர், ஆன்ம தத்துவத் துறையில் இருபத்தைந்து வருடங்களாகப்பாடுபட்டு, ஆராய்ச்சி செய்து பார்த்ததின் பலனாக அவர், "ஆதி முதலில் ஆராய்ச்சிசெய்ய ஆரம்பித்த இடத்திலிருந்து, அப்பால் அடி எடுத்துவைக்க முடியவில்லை." என்பதாகவே குறிப்பிட்டிருக்கின்றார். மேலும், புரபசர் ஜேம்ஸ் என்பவர், "புரபசர் சிஜ்விக் (Professor Sidgwick) என்பவர் இதே ஆன்ம தத்துவத்துறையில் இருபத்தைந்து வருடங்கள் வரையிலும் பாடுபட்டு, ஆராய்ச்சிசெய்து பார்த்த பிறகுகூட அவரும், ஆதிமுதலில் எத்தகைய சந்தேகத்துடனும், தடுமாற்றத்துடனும் ஆன்ம தத்துவத்துறையில் ஆராய்ச்சிசெய்ய இறங்கினரோ, அதே சந்தேகத்துடனும் அதே தடுமாற்றத்துடனுமே இன்னும் இருந்து வருவதாக உரைத்தார்" எனவும் எடுத்துக் காட்டியிருக்கின்றார். இவைகள் யாவும் வாய்ச்சாலமும், சொல்வன்மையும் பொருந்தியவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட

வைகளாகும். தோழர் E. S. P. ஹெய்ன்ஸ் (E. S. P. Haynes) என்பவர், தாம் எழுதிய "ஆத்ம அழிவின்மையின் நம்பிக்கை" (The Belief in Personal Immortality) என்னும் புஸ்தகத்தில், "ஆத்ம தத்துவத்துறையில் ஆராய்ச்சி செய்து வந்ததின் காரணமாக நமக்கு இதுவரையிலும் ஒருவித நன்மையும் உண்டாகவே இல்லை. ஆனால், ஆத்ம தத்துவ நூலின் ஆராய்ச்சிக்கும், பயிற்சிக்கு உரிய பாகமானது முன்னையைவிட இப்பொழுது விரிவாக்கப்பட்டது" என்பதாகத்தான் அவரும் குறிப்பிட்டிருக்கின்றார். விஞ்ஞான சாஸ்திரத்தின் உதவியைக் கொண்டு, இந்த நிமிடம் வரையிலும் மனதை ஆராய்ச்சி செய்து பார்த்த பிறகுகூட, அடுத்த ஜன்ம வாழ்க்கை உண்டு எனக்கூறுவதற்கு யாதொருவித ஆதாரமும் நாளது வரையிலும் அகப்படவேயில்லை.

"கடவுளின் இலக்ஷணத்தையும், அவருடைய சர்வ வியாபகத் தன்மையையும், ஆன்மாவின் நாசமற்ற நிலைமையையும் பகுத்தறிவுக்கேற்ற முறையில் சீர்திருத்தி, அமைக்கவேண்டுமென்கின்ற முயற்சியைக் காரணமாகக்கொண்டே நவீன தத்து ஞான சாஸ்திரம் தோன்றுவதற்கு ஏதுவாயிற்றென" தோழர் ஜோசப் மெக்காபி Joseph Mccabe என்பவர், தம்முடைய "மதத்தின் சோர்வு" The Bankruptcy of Religion என்னும் புஸ்தகத்தில் குறிப்பிட்டு விட்டு, "இத்தகைய கேள்விகள் யாவும் தத்துவஞான சாஸ்திரத்தில் தற்காலம் விவாதிக்கப்படாமலிருந்து வருவதானது மிகவும் குறிப்பிடப்பட வேண்டிய ஓர் விசேஷ சம்பவமாகு" மென்பதாகவும் உரைக்கின்றார். மேலும், "தத்துவ ஞானத்தைப்பற்றிய வியாக்யானங்களையும், பிரசிங்கிகளையும், தற்காலத்தில் பெயர் பெற்ற எந்த சர்வகலாசாலையினுலும் சரி—அது ஆக்ஸ்போர்டு அல்லது கேம்

பிரிட்ஜ் சர்வ கலாசாலையாக யிருந்தபோதிலும் சரியே, அது கோலம்பியா அல்லது ஹார்வார்டு சர்வகலாசாலையாக யிருந்த போதிலும் சரியே, அது பாரிஸ் அல்லது பேர்லின் சர்வகலா சாலையாக யிருந்தபோதிலும் சரியே—அது எந்த சர்வகலா சாலையாக யிருந்தபோதிலும் நீங்கள் மட்டும் அந்த சர்வகலா சாலையில் சேர்ந்து ஒரு வருடம் முழுவதும் படித்துக்கொண் டும், கேட்டுக்கொண்டும் வருவீர்களேயானல், உடற்கூற்று சாஸ்திரமானது உங்களுக்குப் போதிக்கப்படும்பொழுது எப் படிக் கடவுளைப் பற்றியும், ஆன்மாவைப்பற்றியும் நீங்கள் கேள்விப்படா திருப்பீர்களோ, அவ்வாறே தான் தத்துவஞான சாஸ்திர போதனையிலும் நீங்கள் கடவுளை ப்பற்றியும், ஆன்மாவைப்பற்றியும் கேள்விப்படவே மாட்டீர் கள்'' என்பதாகவும் தோழர் ஜோசப் மெக்காபி அவர்கள் உரைத்திருக்கின்றார். அறிவைக்கொண்டு, கடவுள் உண்டு என வாவது, அல்லது ஆன்மா அழிவில்லாமலிருக்கின்ற தெனவா வது தீர்மானிக்க முடியாதென்பதே தத்துவ ஞான சாஸ்திரத் தின் தீர்ப்பு ஆகும்.

புரபசர் ஜேம்ஸ் எச். லூபா (Professor James H Leuba) என்பவர் அமெரிக்கா தேசத்தில் வசிக்கக்கூடிய விஞ் ஞான சாஸ்திரிகளுக்கும், சரித்திர ஆசிரியர்களுக்கும், சமு தாயக்கலை வல்லுனர்களுக்கும், ஆன்ம தத்துவ நூலாசிரியர்க ளாகியவர்களுக்கும் சில கேள்விகளை விடுத்து, அக்கேள்வி களுக்குப் பல்வேறு ஆசிரியர்களாலும், அளிக்கப்பட்ட விடைகளை ஒன்ருகத் திரட்டி, "கடவுள் நம்பிக்கையும், அழி வின்மையும்" (The Belief in God and Immortality) என்னும் நூலில் விரிவாக எழுதிக் கொண்டு வந்தி ருக்கின்றார். அவரால் அவ்வாறு விடுக்கப்பட்ட கேள் விகளில், நீங்கள் "கடவுளும், ஆன்மாவும் உண்டு

என நம்புகின்றீர்களா?" என்பதும், "ஆன்மா அழிவில்லாதது எனவும் நீங்கள் கருதுகின்றீர்களா?" என்பதும் இரு முக்கிய கேள்விகளாகும். இந்த இரண்டு கேள்விகளுக்கும், 100க்கு 49-3 விஞ்ஞான சாஸ்திரிகளும், நூற்றுக்கு 63 பிராணி நூல்சாஸ்திரிகளும், 100க்கு 48-5 சரித்திராசிரியர்களும், நூற்றுக்கு 72-9 புகழும் கீர்த்தியும் வாய்ந்த சமூதாய கலை நிபுணர்களும், நூற்றுக்கு 80-2 ஆன்ம தத்துவ நூலாசிரியர்களும் தங்களுக்குக் கடவுள் நம்பிக்கையே இல்லை என்பதாகவும், ஆன்மாவின் அழிவில்லா நிலைமையைப்பற்றி சந்தேகிப்பதாகவும் எழுதியிருக்கின்றார்கள். மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் கல்வியின் பல்வேறு துறைகளிலும் மக்களுடைய அறிவும், ஆராய்ச்சியும் எவ்வளவுக்கெவ்வளவு அபிவிருத்தியடைந்து, அவர்கள்பேரும், புகழும், கீர்த்தியும் வாய்ந்தவர்களாகக் காணப்படுகின்றார்களோ, அவ்வளவுக்கவ்வளவு கடவுள் நம்பிக்கையற்றவர்களின் எண்ணிக்யைகம் அவர்களுடைய கூட்டத்தில் அதிகமாகவே காணப்படுகின்றது.

இவ்வுலகிலுள்ள மக்கள் யாவருக்குமே, அடுத்த ஜன்மத்தினுடைய வாழ்க்கையின்மீது அதிக மோகமுண்டெனவும், அவர்களுடைய இந்த ஆசையானது சத்தியமாக நிறைவேறியேதான் தீருமெனவும் நாம் அடிக்கடி கூறப்பட்டுவந்திருக்கின்றோம். ஆனால், ஆன்மாவின் அழிவில்லாத நிலைமையைப்பற்றிய நம்பிக்கையானது எல்லா மக்களுக்குமே கிடையாதென்பது மட்டும் உண்மையே யாகும். ஏனெனில், இத்தகைய ஓர் நம்பிக்கையானது இலங்கைத்தீவில் வசிக்கும் வேடுவ (Veddahs of Ceylon) ஜாதியாருக்கும், ஆஸ்திரேலியா தேசத்திய ஆதிமக்களில் ஓர் சில வகுப்பினருக்கும், இன்னுமிருக்கப்பட்ட இதரப் பழங்குடிமக்களுக்கும் கிடை

யவே கிடையாது. உலக மக்களில் மூன்றில் ஒரு பங்கு ஜனத்தொகையையுடைய பௌத்த மதத்தினர்களுக்கும் இத்தகைய நம்பிக்கை கிடையவே கிடையாது. ஏனெனில், பௌத்தர்கள் யாவரும் நிர்வாணத்தை யடையவேண்டுமெனவே தான்—அதாவது பிறப்பே வேண்டாமென்பதாகத் தான் முயர்ச்சி செய்துகொண்டு வருகின்றார்கள். சைன தேசத்திய ஆதிகாலத்திய மதங்களிலும், கன்பூசியஸ் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட கன்பூசியானிஸம் என்னும் மதத்திலும் கூட 'அது காணப்படவே இல்லை. மேலும், மேற்கு உலகில் வசிக்கக்கூடிய பத்து லக்ஷக்கணக்கான மக்கள் அதில் நம்பிக்கை கொள்ளவுமில்லை; அதை விரும்பவுமில்லை. ஆனால், அழிவில்லாமலேயே யிருக்கக்கூடிய நிலைமைக்கு உலகத்திலுள்ள மக்கள் யாவரும் ஆசைப்படுவதாகவும், விரும்புவதாகவுமே தான் வைத்துக்கொள்ளுவோம். இக்காரணத்தினாலேயே, அதனுடைய உண்மையானது நிரூபித்துவிடப்பட்டுவிட்டதாக நாம் கருதிவிடமுடியாது. மக்கள் யாவரும் தங்களுடைய ஆசைகளையும், இச்சைகளையும், விருப்பங்களையும் நிறைவேற்ற முடியாத ஓர் நிலைமையிலேயே இருந்துவருவதாக சரித்திரங்களில் காணப்படுகின்றது. தோழர் ஜான் ஸ்டுவர்ட் மில் (John Stuart Mill) என்பவர் உரைத்ததுபோல, மக்கள் யாவரும் உண்ணவேண்டுமெனக் கூறப்பட்டுவரும் காரணத்தாலேயே, அழிவில்லாமலும், நீடித்தும் நமக்குக்கிடைக்கவேண்டிய அளவு உணவுபதார்த்தங்கள் நமக்குக் கிடைத்துவிட முடியுமென நாம் கூறிவிடமுடியாது.

நாம் வாலிப திசையிலிருக்கும்பொழுது, அழிவில்லாமல் நீடித்து வாழவேண்டுமென்கின்ற இச்சையானது நமக்கு அதிகமாக இருந்துவருகின்றது. வாலிப திசையில், தைரியமான எண்ணங்கள் அவைகளினுடைய உச்சஸ்தானங்களை அடைந்

திருக்கும்பொழுதும், செய்து முடிக்கவேண்டுமென்று கருதி நாம் பிரயத்தனப்படும்பொழுது நமக்கு நம்பிக்கையுமேற்பட்டு, ஆசையெனக் கூறப்பட்டுவரும்படியான சூரியனும் தனது ஒளி பொருந்திய கிரணங்களை அப்பொழுது பரப்பும்பொழுதும், வாழ்க்கையின் போராட்டமானது,வெற்றியின் காரணமாலேற்பட்ட பிரகாசத்தினால் இன்பகரமாகவும், சந்தோஷகரமாகவும், மகிழ்ச்சிகரமாகவும் தோன்றும்பொழுதும் நம்முடைய முக்கியத்வத்தையும், கம்பீரத்தையும் பற்றிய ஓர் உயர்ந்த உணர்ச்சியானது நமது நரம்புகளில் பாய்ந்து, ஓடுகின்றது; நாம் மமதையுள்ளவர்களாகவும், அகங்காரமுள்ளவர்களாகவுமாகின்றோம்; வாழ்க்கையின் அமைதியும், நிம்மதியுமற்ற தூண்டுதலை நாம் உணர்ந்து—அதாவது அறிந்து, அவ்வாறே தொடர்ச்சியாக யிருந்துவரவேண்டுமெனவே நாம் விரும்புகின்றோம். ஆனால், வயோதிக திசையில், போராடுவதற்கு வேண்டிய தைரியமும், பலமும், ஊக்கமும், முயற்சியும் குறைந்து, விலகிப்போய் விட்டபொழுதும், மறைந்துபோன அதிகாரத்தையும், வல்லமையையும், சக்தியையும், வாலிப திசையையும் எண்ணி எண்ணி மனம் புண்ணாகும் பொழுதும், வாழ்க்கையின் வெற்றியும், வாழ்க்கையின் பரிசும், அதனுடைய வியப்பும் நடுங்கிக்கொண்டிருக்கும் படியான உள்ளங்கையைவிட்டு, விலகி உறுதியான கரங்களுக்குச்சென்று தங்கியிருக்கும் பொழுதும், களைப்படைந்த பிரயாணி தளர்ச்சியடைந்த நடையுடன் மலையுச்சியிலிருந்து அதன் அடிவாரத்தை நெருங்கும் பொழுதும், பஞ்சடைந்த அவனுடைய கண்கள் பார்க்க ஆசைப்படாதிருக்கும் பொழுதும்;வாழ்க்கைச்சூரியனுடைய கிரணங்கள் விலகி, குறைந்துகொண்டே வரக்கூடிய நிலைமையின் ஊடே அந்தகாரமான இருளின் சாயைத்தோன்றும் பொழுது, அந்த வயோதிகமனிதன், அவனு

டைய சுமையை இறக்கிக் கீழே வைத்துவிட்டு, நித்திரையில் ஆழ்ந்து, மெய்மறந்திருக்க விரும்புகின்ருன்.

இவ்வுலகில் நம்மால் செய்யப்படும் பாவங்களைப் பரிகாரம் செய்து கொள்ளுவதற்காக வேண்டியாவது, அடுத்தஜன்ம வாழ்க்கையானது இன்றியமையாததாகின்றதென்பதாக அவர்கள் உரைக்கின்ருர்கள். ஆனால், இந்த ஜன்மத்தில் நமக்குஉயிரை அளித்த அந்தச் சக்தியானது, நாம் இந்த ஜனனத்தில் அனுபவித்துக் கொண்டுவரும்படியான இன்பங்களையும், சந்தோஷங்களையும், போகபோக்கியங்களையும் காட்டிலும் பதின் மடங்கதிகமான இன்பங்களையும், சந்தோஷங்களையும், போகபோக்கியங்களையும் நமக்கு மறு ஜனனத்தில் மட்டும் அளிக்கப்போவதாக நாம் ஏன் எண்ணிக் கொள்ள வேண்டும்? இந்த ஜன்மத்தில் பலவித இன்னல்களுக்கும், அனியாயங்களுக்கும், துன்பங்களுக்கும், கொடுமைகளுக்கும் ஆளாகிய மக்கள், மறுஜன்மத்தில் மட்டும் அளவுக்கதிகமான போகபோக்கியங்களுடனும் எண்ணிக்கையற்ற சௌகரியங்களுடனும் வாழ்ந்து கொண்டு வருவார்களென நாம் எண்ணிக்கொள்ளுவதற்குத்தான் நமக்கு என்ன அதிகாரம் இருந்துவருகின்றது? நியாயம் என வழங்கப்படுவதும், அனியாயம் என வழங்கப்பட்டுவருவதுமான இரு வார்த்தைகளும் மானுஷீக வார்த்தைகளேயாகும்; இயற்கைக்கு, இச்சொற்களின் கருத்துப்புலப்படாதிருப்பதாகவே காணப்படுகின்றது; ஆகையினாலே, இந்த ஜன்மத்தில் நாம் அனுபவித்து வரும் துன்பங்களுக்கும், கொடுமைகளுக்கும் இன்னல்கள் ஆகிய எல்லாவற்றிற்குமே, அடுத்த ஜன்மத்தில் நாம் பரிகாரம் தேடிக்கொள்ளலாமென நினைப்பதற்குப் போதிய முகாந்திர மொன்றும் காணப்படவேயில்லை.

கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் கேள்விகள் யாவும் நியாயமான கேள்விகளாகமாட்டாதா. ஆன்மாவானது அழிவில்லாமலிருக்கக்கூடியதென்பது உண்மையாகவே இருக்கும் பக்ஷத்தில், அந்த முடிவற்ற வாழ்க்கையில் நாம் எவ்வளவு காலமிருந்து வருகின்றோம்? ஒரு தாயாரின் கரங்களிலிருக்கக் கூடிய சிசுவானது, மாண்டுபோகுமேயானால், அந்தக் குழந்தையானது எப்பொழுதுமே உதவியற்றும், உதவுவாரின்றியுமேதான் இருந்துவருமா? வாழ்க்கையின் சுமையைத்தாங்கி, வயோதிக மேற்பட்டு, விருத்தாப்பிய திசையில் தள்ளாடி, பலமிழந்து, நடுக்க முற்று மாண்டு, மடிந்துபோனவர்கள் யாவரும், சாஸ்வதமாகவே தளர்ச்சியான விருத்தாப்பியர்களாகவேதான் இருந்து வருவார்களா? அல்லது யாவருமே ஒன்றாகச்சேர்ந்து, வாலிபதிசையில் அனுபவிக்கக்கூடிய இன்பங்களைத்தான் அனுபவித்துக் கொண்டுவருவார்களா? அங்கே நம்முடைய நிலைமையானது எத்தகைய ஸ்திதியிலிருந்து வரும்? இந்த ஜன்மத்தில் நாம் தாங்கிக்கொண்டிருக்கும் இதே தேகங்களோடு அங்கே செல்லமுடியாதாகையால், அவ்விடத்தில் நாம் வேறு இதர தேகங்களை அடைவோமா? அடைவோமெனக்கூறப்படுமே யானால், அவ்விடத்தில் நாம் பெறக்கூடிய தேகங்கள்யாவும், இவ்வுலகில் நாமடைந்த தேகங்களைப்போலவே தானிருந்து வருமா? அப்படியிருக்கும் பக்ஷத்தில், இந்த ஜன்மத்தில் செவிடர்களாகவும், ஊமைகளாகவும் பிறந்தவர்கள் யாவரும் சாஸ்வதமாகவே இத்தகைய ஊனங்களுடனேயேதான் மறுஜன்மத்திலும் இருந்து வரவேண்டுமா? அறிவற்றுப்பேதைகளாக விளங்கக்கூடியவர்கள் யாவரும் காலச்சக்கரம் வேகமாகச் சுழன்று, அவர்களுடைய ஆயுளின் ஒருபாகம் ஒவ்வொரு விநாடியும் கழிந்துகொண்டே வரும்பொழுது அவர்கள் மாண்டு போனால், அவ்வுலகிலேயுமா அவர்கள் பகுத்தறிவின்றி வாழுவார்

கள்? இம்மாதிரியான தேகம் நமக்கு அடுத்த ஜன்மத்தில் வாய்க்கப் பெறுமெனக் கூறும் பக்ஷத்தில், கண்களென்பதில்லாமல் நாம் பார்க்கக்கூடியவர்களாகவும், செவிகளின்றியே கேட்கக்கூடியவர்களாகவும், கைவிரல்களின்றியே ஸ்பரிசிக்கக்கூடியவர்களாகவும், பேசும் அவயவங்களின்றிப்பேசக்கூடியவர்களென்றுமேதான் நாம் எண்ணிக்கொள்ளவேண்டுமா?

மேலும், நமது காலத்தைப் போக்க நாம் அங்கே என்ன செய்துகொண்டிருப்போம்? பொழுதுபோக்குக்காக வேண்டி நாம் சதா காலமும் உலாவிக்கொண்டேதான் வருவோமா? யாதொரு விதமான வேலையென்பதின்றியும், முடிவின்றி நீடித்துமிருக்கக்கூடிய வாழ்க்கையானது, நம்மைச் சோம்பேரிகளாக்கி, கடைசியில் பைத்தியக்காரர்களாக்கி விடாதா?

இவ்வுலகில் வாழ்ந்த மக்கள் யாவரும் அழிவின்றியும், நாசமாகாமலும் அவ்வுலகில் வசித்துவருவார்களேயானால், அப்பொழுது நம்முடைய சிநேகிதர்களை நாம் அறிந்துகொள்ளுவது கடினமானகாரியமாகயிராதா? ஒரு சமயம் அப்படித்தான் நாம் கஷ்டப்பட்டு, தேடி, அவர்களைக் கண்டுபிடித்த போதிலும், அவர்கள் நம்மையும் அறிந்துகொள்ளுவார்களென்பதும் நிச்சயந்தானா?

1906-ம் ஆண்டில் பிரபசர் வில்ஹம் ஆஸ்ட் வால்டு (Professor Wilhelm Ostwald) என்பவர், ஹார்வாடு சர்வகலாசாலையில் "ஆன்மாவின் அழிவின்மை" என்பதைப் பற்றி ஓர் பிரசங்கம் நிகழ்த்தியபொழுது, "ஒருவன் மரணமடைந்தபிறகு அவனுக்கு நினைவு இருப்பதாகக் கூறுவதானது அசம்பாவிதமேயாகு"மென்பதாகவே உரைத்திருக்கின்றார்.

ஆகவே, ஒருவன் மரணமடைந்த பிறகு அவனுக்கு நினைவு என்பதே இல்லாதிருக்குமேயானல், இப்பொழுது அவனுடைய சுய இயல்பே அவனுக்கு இல்லாமல் போய்விடுகின்றது. ஆகையினலே, சுய அறிவு என்பது ஒருவனுக்குக் கிஞ்சிற்றுமில்லாமல், அவனுடைய ஆன்மா மட்டும் அழிவில்லாமலும், நாசமுறாமலுமிருப்பதாகக் கூறப்பட்டுவருவதானது நாசமுறாமையையோ, அல்லது அழிவின்றி இருப்பதையோ குறிக்கவே குறிக்காது. ஒருவன் சுயஇயல்பும், சுயஅறிவுமின்றி, நாசமுறாதிருந்து வருவதாக உரைப்பதானது, ஓர்மண்ணுங்கட்டியானது, நாசமோ, அல்லது அழிவோ அடையவில்லையெனக் கூறப்படுவதையேயொக்கும். ஒருமனிதன் தன்னுடைய ஞாபக சக்தியை இழந்து விடுவானேயானல், அப்பொழுது அவன் எல்லாவற்றையுமே இழந்தவனகின்றான். ஆகையினலே, நமது நரம்புகளுக்குரிய ஒழுங்கு முறைகளானது நம்மைவிட்டு நீங்கிவிடுமேயானல், அப்பொழுது நாம் எவ்வாறு ஞாபகப்படுத்திக்கொள்ளவோ, அல்லது நினைவு கூர்ந்துகொள்ளவோ முடியும் அவ்வாறிருந்தும், நரம்புகளும், மூளையும், சகித்துக்கொள்ளக் கூடிய தன்மை வாய்ந்ததாகப் புலப்படவே யில்லை.

மேலும், நாம் மீண்டும் உயிர் பெற்று வாழக்கூடிய இந்த உலகமானது எங்கே தான் இருக்கின்றது? நிச்சயமாகவும், உண்மையாகவும் அது இந்த உலகத்தில் இல்லவே இல்லை. அப்படி இல்லையாகில், அது சூரிய மண்டலத்திலுள்ள வேறு எதாவதொரு கிரகத்தில் இருந்து வருகின்றதா? அல்லது அது, இந்த பூமண்டலத்திலிருந்து பல இலட்சக்கணக்கான மைல்களுக் கப்பாலிருக்கக் கூடியதும் ஆகாயத்திற்கு அடுத்தாப்போலுள்ளதுமான எதாகிலும் ஓர் நட்சத்திர மண்டலத்தில் தான் இருந்து வருகின்றதா? உண்மையாக

வே, மறு ஜனனம் உண்டு என்பதாகக்கூறப்பட்டு வருவதி லுள்ள இரகசியம், வியப்பும் யாதெனில், நாம் அதைப்பற்றி யவிவரங்கள் ஒன்றுமே அறியாமலிருந்து வருவதேயாகும்.

ஆன்மா அழில்லமலிருந்து வருவதைப்பற்றி, கிறிஸ் துவர்களின் வேத புத்தகமாகிய பைபிள் என்னும் புஸ்தகத் தில் கூறப்பட்டிருப்பதாலும், அதைப்பற்றிய உத்தரவாதம் அவர்களுக்கு அப் புஸ்தகத்தில் அளிக்கப்பட்டிருப்பதாலு மே தான் கிறிஸ்துவர்கள் எனக் கூறப்பட்டு வருபவர்கள் யாவரும், ஆன்மாவானது அழிவில்லாமலிருந்து வருவதாக நம்பிக்கொண்டு வருகின்றார்கள். இதை நாம் சற்று ஆராய் ச்சி செய்து பார்ப்போம். இவர்களுடைய இத்தகைய நம்பி க்கையும், எண்ணமும் பூர்வ காலத்திய யூதர்களினுடைய மதத்தின் ஓர் பாகமாகவே ஆகாது. மேலும், பழைய ஏற் பாட்டிலுள்ள ஆகமங்கள்யாவும் இதை மறுக்கின்றன. பழைய ஏற்பாட்டிலுள்ள, யோப்புடைய சரிதையில் "மேகம் பறந்து போகிறதுபோல, பாதாளத்தில் இறங்குகிறவன் இனி ஏறிவரான்" என்பதாகவேதான் ஏழாவது அதிகாரம், ஒன்பதாவது வசனத்தில் நாம் வாசிக்கின்றோம். பிரசங்கி, மூன்றாவது அதிகாரத்தில், "மிருகத்தைப் பார்க்கிலும் மனி தன் மேன்மையுள்ளவன் அல்ல" எனவும், "எல்லாம் ஒரே இடத்திற்குப் போகிறது" எனவும், "எல்லாம் மண்ணிலே உண்டாகிறது, எல்லாம் மண்ணுக்குத் திரும்புகிறது" என்ப தாகவும் உரைத்துவிட்டு, ஒன்பதாவது அதிகாரத்தில் "உயி ரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே; மரித் தவர்கள் ஒன்றும் அறியார்கள்; இனி அவர்களுக்கு ஒருப லனுமில்லை; அவர்கள் பேர் முதலாய் மறக்கப்பட்டிருக்கி றது" என்பதாகவும் தான் உரைக்கின்றது.

"ஆனல், என்னுடைய நம்பிக்கைகளுக்கெல்லாம், இயேசுகிறிஸ்து நாதரால் புதிய ஏற்பாட்டில் உரைத்திருக்கப் பட்ட வாக்குத் தத்தங்களே தான் அஸ்திவாரமாகு" மென்ப தாலே ஒரு கிறிஸ்தவனானவன் உரைக்கின்றான். ஆனல், இயேசுகிறிஸ்துவின் வாக்குத் தத்தங்களெனக் கருதப்பட்டும் நம்பப்பட்டும் வரும்படியான இத்தகைய உறுதிமொழிகளை யார்தான் உரைத்திருக்கக் கூடுமென ஒருவருக்குமே திட்ட மாய்த் தெரியாது. அம் மொழிகளையார்தான் உரைத்தி ருக்கக் கூடுமென்பதைப் பற்றி நமக்குத் தெரியாவி ட்டாலும் கூட, அந்த வாக்குத்தத்தங்கள் யாவும் நிறைவேற்றப் படவேயில்லை யென்பது மட்டும் உறுதியேயா கும். மத்தேயுசுவிசேஷம், இருபத்தினான்காவது அதிகாரம், முப்பத்தினான்காவது வசனத்திலும், மார்க்கு சுவிசேஷம், பதி ன்மூன்றுவது அதிகாரம், முப்பதாவது வசனத்திலும், லூக் கா சுவிசேஷம், இருபத்தொன்றுவது அதிகாரம், முப் பத்திரண்டாவது வசனத்திலும் அப்பொழுது இயேசு நாதரானவர், தாம் மீண்டும் வருவதைப்பற்றி, "மனுஷ குமாரன் வல்லமையோடும், மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள் மேல் வருகிறதைக்காண்பார்கள்" என்பதாக உரைத்து விட்டு "இவைகளெ ல்லாம் சம்பவிக்குமுன்னே இந்தச் சந்ததி ஒழிந்து போகாதெ ன்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்பதா கவும் உரைத்திருக்கின்றார். ஆனல், அந்தச்சந்ததியார் அழி ந்து போனதுமல்லாமல், அநேக சந்ததிகளும் அதற்கப்பால் அவைகளைப் பின்பற்றியே தோன்றி, அழிந்து, மறைந்தும் போயின. அப்படியிருந்தும், இயேசுவானவர்— அவர்எப் பொழுதாகிலும் வந்திருந்தால்—இது, அதிகப்படியான குழப் பத்தை உண்டாக்கக்கூடிய விஷயமாகும்-தம்மைப்பின்தொட ர்ந்து வந்தவர்களுக்கு, வேறு ஓர்ஜீவியத்தை அளித்து, அவ

ர்களை ஆசீர்வதிப்பதற்காக மீண்டும், வரவேயில்லை. "பரமண்டலங்களிலுள்ள என்னுடைய பிதாவின் இராஜ்யத்தில் எண்ணற்ற மாடமாளிகைகளும், கூட கோபுரங்களும் இருக்கின்றன" என எழுதியிருக்கும் படியான வசனம் மட்டும் இன்றும் நிலையாகவே இருந்துவருகின்றது. ஆனால், தூரதிருஷ்டிக் கண்ணாடியின் உதவியைக்கொண்டு நாம் ஆகாயத்தைப் பல இலட்சக்கணக்கான மைல்வரை, ஆராய்ந்து, துருவிப்பார்த்தும்கூட, பல்லாயிரக்கணக்காகப் பிரகாசித்துக் கொண்டு வரும்படியான நக்ஷத்திரக் கூட்டங்களை ஆராய்ந்து துருவிப்பார்த்தும்கூட "மாடமாளிகைகளாலும், கூடகோபுரங்களாலும் நிறைந்திருக்கக்கூடியதும், பரமண்டலங்களிலுள்ளதுமான பிதாவின் இராஜ்யத்தை" மட்டும் நம்மால் கண்டுபிடிக்கவே முடியவில்லை.

நம்முடைய நாசமற்ற ஜீவியமானது, நாம் மரணவாயிலுக்குள் பிரவேசித்த உடனே ஆரம்பித்துவிடுவதில்லை எனவும், ஆனால், மரணமடைந்து, பல ஆயிர வருடங்கள் சென்ற பிறகுதான் அந்த நாசமற்ற ஜீவியமானது ஆரம்பிக்கப்படுகின்றதெனவும், கிறிஸ்துமத சம்பிரதாயப்படிகூறப்பட்டு வருவதானது, இதைக்காட்டிலும் இன்னும் அதிகமான ருசிகரமாகவே இருக்கின்றது. அழிவில்லாத ஜீவியம் ஏற்படுவதற்கு முன், மரித்தவர்கள் யாவரும் உயிர்பெற்று எழுந்திருக்க வேண்டும்; பிறகு, யாவருக்கும் பொதுவானதீர்ப்புக் கூறப்படவேண்டும். ஆனால்,நாம் மரித்த பிறகு எப்பொழுதுதான் உயிர்பெற்று எழுந்திருக்கின்றோமென்பதை மட்டும், விவில்யநூலும் விளக்கவில்லை, மற்றும் ஒருவராலும் உரைக்கவு முடியாது. இதற்கிடையில் மாண்டுபோனவர்கள் யாவரும் மாண்டுபோ

னவர்களேதான்—அவர்களுடைய ஆன்மாக்கள் யாவும், அவர்களுடையத்தூசிகளைப் போலவேதான் உணர்ச்சியற்றும், சைதன்னியமற்றுமே தானிருந்து வரும். முதன் முதலாக மரணம் உண்டாகிய நாள் முதற்கொண்டு, நாளது வரையிலும்—அதாவது பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக, மாண்டு மடிந்த மக்கள் யாவரும்—அதாவது ஆண், பெண் அடங்கலும், இன்னும் பல இலட்சக்கணக்கான ஆண்டுகள் சென்று, மீண்டும் உயிர்ப்பிக்கப்பெற்று, விசாரணை செய்யப்பட்டு, தீர்ப்புக் கூறப்படுவார்களென்று சொல்லப்பட்டால், இதிலுள்ள ஆபாசத்தை வாசகர்களே நிச்சயிக்கட்டும்! நாம் மரணமடைந்து, பல இலட்சக்கணக்கான ஆண்டுகள்கழிந்து, அதன் பிறகு நாம் மீண்டும் உயிர்பெற்று ஜீவிக்கத்தான் போகின்றோமென்பதை நினைத்துப் பார்க்குந்தோறும் நமக்கு உண்டாகக்கூடிய உணர்ச்சியையும், சந்தோஷத்தையும் நீங்களே யோசனை செய்து பாருங்கள்! உண்மையாகவே, இது ஒரு ஆதாரமற்ற, வீண் நம்பிக்கையே யாகும். கிறிஸ்துமதத்தின் சர்வார்த்தமும், அபிப்பிராயங்களும் தங்கமுலாம் பூசிய நம்முடைய சர்வநாசத்தையும், நிர்மூலத்தையும்தான் நமக்குக் காணிக்கையாகச் செலுத்துகின்றதே யல்லாமல், மற்றபடி அழிவின்மையையாவது அல்லது நாசமின்மையை யாவது, நமக்கு அளிக்கவே இல்லை. இந்த உலக வாழ்க்கையின் தொடர்ச்சியாகவே அடுத்த உலகிலும் நமக்கு வாழ்க்கை ஏற்படுமென்பது நிச்சயமாக இருந்தால் மட்டும், அது ஒருசமயம் நமக்குப் பிரியத்தையும், பக்ஷத்தையும் விளைவிக்கக்கூடும். நாம் மரணவாயிலையடைந்தவுடன் நிர்மூலமும், நாசமும், அழிவுமே நம்மைப் பீடிப்பதாக யிருக்குமேயானல், அந்த மரணமே நீடித்தும், சாஸ்வதமாகவுந்தான் இருக்கட்டுமே.

மீண்டும் நாம் மற்ெருரு விஷயத்தையும் கவனிக்கவேண்டியதாயிருக்கின்றது. கிறிஸ்து மதமானது, அதனுடைய கொள்கைகளேயும், கோட்பாடுகளேயும் உண்மையே யென்பதாக நம்பிக்கொண்டு வரும்படியான ஒரு சிறு பான்மையான மக்கள் கூட்டத்திற்குசதாகாலமுமுள்ளதும், நித்தியமானதும், முடிவற்றதும், சாசுவதமுமான சந்தோஷத்தையும், இன்பத்தையும், உல்லாசத்தையும், களிப்பையும் அளிப்பதாக உறுதியளித்துவிட்டு, அவைகளே உண்மையென நம்பாத உலகிலுள்ள பெரும்பான்மையான மக்களுக்கு அம்மதமானதுசதாகாலமுமுள்ளதும், நித்தியமானதும், முடிவற்றதும், சாசுவதமுமான துன்பத்தையும், வருத்தத்தையும், நோயையும், பிரயாசையுமே அளிப்பதாகத்தான் தீர்க்க தரிசனமாக உரைக்கின்றது. காப்பாற்றப்பட்ட ஓர் சிறிய கூட்டத்தார் மட்டும் சாசுவதமாகவும், நீடித்துமிருக்கக்கூடியதும், சுயலாபதிருஷ்டியுள்ளதுமான பேரின்பத்தில் ஆழ்ந்தும், மூழ்கியும், உல்லாசமாகவும் தங்களுடைய ஜீவியத்தை நடாத்துவார்களெனவும்—அதாவது புண்ணியம் செய்கின்றவர்கள் சுவர்க்க லோகத்தில் சதா இன்பத்தையே அநுபவித்துக்கொண்டு வருவார்களெனவும், சபிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்களின் புலம்பலும், அழுகையும், கூக்குரலும், பழிவாங்கும் குணமும், சகிக்கொணுப் பகைமையும் வாய்ந்த ஓர் கடவுளால் இதற்காகவென்றே ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கக்கூடியதும், கந்தகமும், நெருப்பும், சதா எரிந்து கொண்டிருக்கக் கூடியதுமான ஓர் இடத்திலிருந்து சாசுவதமாகவும், நீடித்தும் தோன்றிக்கொண்டேதானிருக்குமெனவும்—அதாவது பாவத்தைச் செய்கின்ற மக்கள்யாவரும் அடுத்த ஜன்மத்தில் சாற்ெருணுத்துன்பத்தையே நரகலோகத்தில் அனுபவித்துக்கொண்டு வருவார் களெனவும் தான் அது தீர்க்க தரிசனமாக உரைக்கின்றது. இவைகள்தான் கிறிஸ்தவர்களின் தேவதீர்ப்பாகும்—

கிறிஸ்துமதக் கொள்கைப்படி மோக்ஷலோகத்திலும், நரகலோகத்திலும் நீடித்தும், சாசுவதமாகவும் நடந்தேறிவரக்கூடிய வாழ்க்கையானது இது தான். ஆனால், அழிவில்லாமலிருக்கக்கூடிய இத்தகைய வாழ்க்கையானது நமக்கு அனுக்கிரகிக்கப்பட்ட ஓர் வரமாகவோ, அல்லது ஆசீர்வாதமாகவோ இருந்து வருவதற்குமாறாக, அளவுக்கு மீறி வெறுக்கப்பட்டதும், சபிக்கப்பட்டதுமான ஓர் வாழ்க்கையே யாகும். சாசுவதமாகவும் நீடித்து, மிருக்கக்கூடிய துன்பத்தையும், வேதனையையும் ஒரு மனிதன் அனுபவிப்பதைக் காட்டிலும், உலகிலுள்ள எல்லா மக்களுமே நிர்மூலமாய் விடுவது சாலவும் சிறந்ததாகும். ஒரு கிறிஸ்தவனுடைய சுவர்க்க லோகமானது, சுயநலமான ஓர் கனவே யாகும்; நரகலோகம் எனக் கூறப்பட்டு வருவதானது, தெய்வ பக்தி வாய்ந்த ஓர் ஜன்ம விரோதியினுடைய பயனற்ற, பயமுறுத்தலே யாகும். மரணத்திற்குப் பின்நேரிடக்கூடிய வாழ்க்கையைப் பற்றி, கிறிஸ்து மத சாஸ்திரமாகியபைபிளுக்கு ஒன்றுமே தெரியவராது!

உண்மையைக் கூறவேண்டுமானால், அழிவின்மை எனக் கூறப்பட்டு வரும்படியான தத்துவமானது, கிறிஸ்து மதத்தை அடிப்படையாகக்கொண்டு தோன்றவில்லை. கிறிஸ்துவானவர் பிறந்து, தோன்றுவதற்குப்பல்லாயிர வருடங்களுக்கு முன்னும், விவில்ய நூலில் காணப்படும் வசனங்களில் ஒரு வரிகூட எழுதப்படுவதற்கு முன்னும், எண்ணிக்கையற்ற, பல லட்சக்கணக்கான ஆண்களும், பெண்களும் அடுத்த ஜன்மத்தைப் பற்றிய நம்பிக்கையுடனேயே பிறந்து, வளர்ந்து, கடைசியாக மாண்டு, மடிந்துபோனார்கள். பாரசீகர்களிடமிருந்து—அதாவது சௌராஸ்டர் என்பவரை பயபக்தியுடன் விசுவாசித்தத் தொண்டர்களிடமிருந்து—இந்த அழிவின்மை என்னும் தத்துவத்தை ஆதியில் யூதர்கள் அடைந்

தார்கள். மறு உலக வாழ்க்கையைப்பற்றிய நம்பிக்கையானது கிறிஸ்து மதக்கோட்பாடாகாது. ஆனால், அது விக்கிரக ஆராதனைக்காரர்களினுடைய—அதாவது பல தெய்வங்களை வணங்குகின்றவர்களினுடைய ஒரு கனவேயாகும். அவர்களுடைய அந்தக் கனவானது உண்மையாகவே யிருக்கும் பக்ஷத்தில்—அதாவது இந்த உலகில் நாம் தோன்றி மறைந்தவுடன், அடுத்த உலகில் ஓர் புதிய வாழ்க்கையில் பிரவேசிக்கின்றோமென்பது உண்மையாகவே யிருக்கும் பக்ஷத்தில்—இந்த உண்மைக்கும் ஏனைய இதர மதத்துக்கும் யாதொரு சம்மந்தமுமில்லை. இந்த உண்மையானது, நம்பிக்கையாலோ, அல்லது நம்பிக்கையானது அதிகப்படுவதினாலோ, அல்லது அதே நம்பிக்கையானது குறைவு படுவதினாலோ பாதிக்கப்பட்டுவிடாது. இயற்கையில் காணப்படக்கூடிய விஷயம்போலவேதான் இதுவும் இருந்து வருகின்றது—அதாவது தாவரவர்க்கங்கள் வளர்ந்துகொண்டு வருவதைப்போலும், நட்சத்திரக்கூட்டங்கள் பிரகாசித்துக்கொண்டு வருவதைப்போலும்—உலக மக்களுக்குரிய ஓர் குணமாகவே தான் இதுவும் இருந்துகொண்டு வருகின்றது. ஒவ்வொருவரும் இதை நம்பிக்கொண்டுதான் வருகின்றார்கள். அப்படி நம்பித்தான் தீரவேண்டுமென்பதும் நமது கடைமையே போலும்! அவ்வாறு நாம் சாசுவதமாகவும், மாறுமலுமிருக்கத் தான் வேண்டுமென தெய்வக் கட்டளையும் பிறந்திருக்கும் போலிருக்கின்றது!

மேலும், மரணமடைந்த பின் நாம் மீண்டும் உயிருடன் ஜீவித்துக்கொண்டுதான் வருகின்றோமென்னும் விஷயமானது நிரூபிக்கப்பட்டு விட்டபோதிலும்கூட, இந்த விஷயமானது அழிவின்மை யென்னும் தத்துவத்தையோ, அல்லது உண்

மையையோ நிலை நாட்டிவிட்டதாக ஏற்பட்டு விடாதென்பதையும் நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில், இந்த உலகத்தில் நடைபெற்று வரும்படியான சம்பவங்களைப் போலவே தான், அந்த உலகத்திலும் விருத்தாப்பிய திசையும், மரணமும் நேரிடக்கூடும்; மக்களின் சராசரி வாழ்க்கையானது, இவ்விலகிலிருந்துவருவதைக் காட்டிலும், அவ்வுலகில் அதிகமாக யிருந்துவரவும் முடியாது; நாம் இரண்டாவதாக மரணமடைவதானது, ஒவ்வொரு வாழ்க்கையின் ஜீவிய சரித்திரத்தையும் நாம் அடியோடு நாசம் செய்துவிட்டதாகவு மேற்படக்கூடும்.

இன்னும் ஓரேஒரு கேள்வி மட்டுமிருக்கின்றது. அழிவில்லாத நிலைமையானது விரும்பப்படக்கூடியதாகுமா? ஒன்றுமே நமக்குத்தெரியாமலிருந்து வரக்கூடியதும், சாசுவதமாகவும், நீடித்துமிருக்கக்கூடியதுமான ஓர் வாழ்க்கையை நினைந்து, அதன்மீது மோகப்பட்டு, ஆசையுடன் அதை எதிர்பார்த்துக்கொண்டிருக்கலாமா? இவ்வுலகில் நாம் அனுபவிக்கும் துன்பங்களுக்கும், கஷ்டங்களுக்கும், வருத்தங்களுக்கும் மரணத்தின் மூலமாக நிவாரணம் தேடிக்கொள்ளலாமெனக் கூறப்பட்டு, இவ்வுலக வாழ்க்கையானது ஆசீர்வதிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், இவ்வுலக வாழ்க்கையைப் போலவே, சாசுவதமாகவும், நீடித்துமிருக்கக் கூடிய அவ்வுலக வாழ்க்கையும் திருப்திகரமற்றதாகவே யிருக்துவிடும் பக்ஷத்தில், நாம் என்ன செய்வது? கடைசியாக, அவ்வுலக வாழ்க்கையிலும் நமக்கு அதிருப்தியுண்டாகி, வெறுப்பு ஏற்பட்டு, மாண்டு மடிந்துபோக வேண்டுமென விரும்பினல் என்செய்வது? அடுத்த உலக வாழ்க்கையைப்பற்றி நமக்கு இருந்த எண்ணங்களும், விருப்பங்களும் அப்பொழுது காற்றாகப் பறந்துவிடக்கூடும்— அதாவது சாசுவதமாகவும், நீடித்து மிருக்கக்கூடிய

ஓர் வாழ்க்கையானது, எல்லையற்ற ஓர் சாபக்கேடாகவே தான் நிர்ணயிக்கப்படும். இந்த எண்ணமானது மிக்க அச்சமானதும், பயமானதும், திகிலானதுமே யாகும்!

ஆனால், இயற்கையின் தத்துவத்தை நாம் ஆராய்ச்சி செய்து பார்ப்போமே யாகில், அப்பொழுது ஒருதடவை நாம் மரணமடைந்ததும் மீண்டும் உயிர்பெற்று ஜீவித்திருக்க மாட்டோ மென்பதையே அது நிரூபித்துக்காண்பிப்பதைக் காணுகின்றோம். "இத்தகைய ஓர் குறித்த முடிவுக்கே நாம் வரவேண்டுமென நிர்ப்பந்தப்படுத்தப்படுகின்றோம்" என்பதாகவே, தோழர். ஹெக்கல் (Haeckel) என்பவர் தமது "உலகத்தின் சித்திரம்" (The Riddle fo the Universal) என்னும் நூலில் குறிப்பிட்டிருப்பதுடன், "மனித ஆத்மாவானது அழிவுறுமலும்,நாசமடையாமலுமிருப்பதாக நம்பப்பட்டுவரும்படியான இந்தக் கோட்பாடானது, தற்கால விஞ்ஞானசாஸ்திரத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கலான ஆணித்தரமான உண்மைகளுக்குப் பயனில்லாததும் விரோதமானதுமான கொள்கையேயாகு"மென்பதாகவே, அவர்மேலும் குறிப்பிட்டிருக்கின்றார். புகழ்பெற்ற வான சாஸ்திர நிபுணராகிய பிரபசர் பிராக்ட்டர் (Professor Proctor)என்பவர், "மறுஉலக வாழ்க்கையைப்பற்றிப், பொதுவாகவே எல்லா மக்களும் எத்தகைய காரணத்தைக் கொண்டும், எத்தகைய சாக்ஷியத்தைக் கொண்டும் உண்மையென நம்பிக்கொண்டு வருகின்றார்களோ, அத்தகைய எல்லாக் காரணங்களுக்கும், எல்லா சாக்ஷியங்களுக்கும் அஸ்திவாரமே இல்லையென்பதாக எண்ணிக்கையற்ற, தக்க ஆதாரங்களுடன் தோழர் ஹெர்பர்ட் ஸ்பென்சர் (Herbert Spencer) என்பவர் நிரூபித்திருக்கின்றார்" என்பதாகவே எழுதியிருக்கின்றார். மேலும், புரபசர் டிண்டால் (ProfessorTyndall) என்பவர்,"ஜடப்பொருளானதுநிராகரி

க்கப்படுமே யானல், ஜீவன் மட்டும் எங்கே காணப்படும்?" என்பதாகவே உரைத்து, இந்த விவகாரத்தை ஒரே வரி யில் அடக்கி விட்டார். அடுத்த உலக வாழ்க்கையைப்பற்றி, இயற்கையின் சட்டதிட்டங்கள் மட்டும் மறுப்பதாகவும், தத்துவ சாஸ்திரிகளும் நிராகரிப்பதாகவும்விஞ்ஞான சாஸ்திரி களும் இல்லை என்று உணர்ந்திருப்பதாகவும், எதிர்த்து உரைப் பதாகவும் வாசகர்கள் கருதிக்கொள்ளக்கூடாது. ரெவரண்டு மினட்.ஜே.சேவேஜ்(Reverend Minot J.Savage) என்னும் பாதிரியார், "அழிவில்லாமலும், நாசமுருமலு மிருக்கக்கூடிய நிலைமையைப் பற்றி நமக்கு ஏதாகிலும் அத்தாக்ஷியிருக்கின்ற தா?..............அழிவில்லாமலும், நாசமுருமலு மிருக்கக் கூடிய ஓர்நிலைமையைப்பற்றி, ஆதாரங்களெனக் கூறப்பட்டு வரலான ஏதாகிலு மொன்று நமக்கிருந்து வருவதாக, நான் நினைக்கவே முடியவில்லை............அழிவின்மையானது நிரு பிக்கப்படத்தக்க உணர்ச்சியுடனிருந்து வருவதாகக் காணப்ப டவே யில்லை" என்பதாகவேதான் உரைத்திருக்கின்றார். ரெவ ரண்டு ஆர். ஹீபர் நியூட்டன் (Reverend R. Heber Newton) என்னும் பாதிரியார், "உடலைவிட்டு நீங்கிய உயிரைப்பற்றி நமக்கு ஒன்றுமே தெரியவராது..........சடப் பொருளினின்றும் பிரிந்து, வேருகத் தனித்து நிற்கும்படி யான ஓர் மனதைக்குறித்து நமக்கு ஒன்றுமே தெரிய வராது.......விஞ்ஞான சாஸ்திரத்தின் ஆராய்ச்சியை அடிப் படையாகக் கொண்டிராத எந்தத் தத்துவத்தின்மீதும், எந்தக் கொள்கையின் மீதும், எந்த நம்பிக்கையின் மீதும், எந்த மத த்தின் மீதும் எனக்கு நம்பிக்கை யென்பது கிடையவே கிடை யாது, என்பதாகத்தான் அழுத்தந்திருத்தமாக உரைத்தி ருக்கின்றார்.

அழிவின்மை என்னும் தத்துவத்தை அஸ்திவாரமாகக் கொண்டு கட்டப்பட்ட இந்த நம்பிக்கை யென்னும் கோட்

டையானது மனித வர்க்கத்திற்கே, திடுக்கிடச்செய்யும்படி யான அதிகப்பட்ட செலவு செய்யப்பட்டு, கட்டப் பட்டதாகத் தெரிய வருகின்றது. பல நூற்றூண்டுகளாக மக்கள் வர்க்கத்தையே, புரோகிதக் கூட்டத்தினருக்கு இது அடிமைப் படுத்தி விட்டது. சுவர்க்க லோகத்தைப்பற்றியும், அங்குள்ள வாழ்க்கையைப்பற்றியும் புகழ்ந்து, வர்ணித்துரைக்கப் பட்ட பகட்டு வார்த்தைகளில் மக்கள் மயங்கி, ஏமாற்றப் பட்டதினிமித்தம், அவ்வுலகில் தாங்கள் அனுபவிக்கப் போவதாகக் கருதிய இன்பங்களையும், போக போக்கியங்களையுமே பெரிதாக மதித்து, பல லட்சக்கணக்கான மக்கள் இவ்வுலக வாழ்க்கையின் மீது மனம் வையாமலும், அதைப்பற்றிச் சிந்திக்காமல் அசட்டையாயிருக்கவும் நேரிட்டது. நரக லோகத்தையும், அங்கு அனுபவிக்க வேண்டிய துன்பங்களையும், கஷ்டங்களையும், வருத்தங்களையும், பல இன்னல்களையும் விபரமாக மக்களுக்கு எடுத்துரைத்து, அவர்களைப் பயமுறும்படியாகவும், அச்சமுறும்படியாகவும் செய்திருப்பதினுலும், நரகலோக வாழ்க்கையை மக்கள் நினைக்குந்தோறும், அவர்களுக்கு ஓர் வித பீதி யுண்டாகி, நடுநடுங்க ஆரம்பித்ததினுலும் பல லட்சக்கணக்கான மக்கள் தங்களுடைய வாணுட்களை, மூடப்பழக்கவழக்கத்திலேயே கழித்துக்கொண்டுவரும்படியாகவும் நேரிட்டுவிட்டது. இவ்வுலகவாழ்க்கையானது, அடுத்த உலகவாழ்க்கைக்கு ஓர் உபக்கிரமமே யாகுமென மக்களுக்குக்கூறப்பட்டும், போதிக்கப்பட்டும் வந்ததத்துவத்தை, அவர்கள் உண்மையேயாகுமென்பதாக நம்பிக்கை கொண்டு வந்ததின் காரணமாய்த்தான் மதங்களின் பெயரா[illegible] பெறும்படியான பல்வேறு அட்டூழியங்களும், இவ்வுலகமானது மக்களின்கண்ணீர்களினுலும், மக்களுடைய இரத்தங்களினுலும் நனைக்கப்பட்டு, ஈரமாக்கப்பட்டுவருவதும், மதங்களின்

பெயரால் ஏற்பட்ட சண்டைகளின் காரணமாக மக்கள் கொள்ளையடிக்கப்படுவதும், கொழுத்தப்படுவதும், கொலை செய்யப்படுவதும், சங்கரிக்கப்பட்டு வருவதும், "உன்னுடைய மதந்தான் தாழ்ந்தது— என்னுடைய மதந்தான் உயர்ந்தது எனவும்" "என்னுடைய மதந்தான் உயர்ந்தது—உன்னுடைய மதந்தான் தாழ்ந்தது" எனவும் கூறி, பல்வேறு மதத்தினரும் ஒருவரையொருவர் வெறுத்தும், பகைத்தும், சண்டை செய்துகொண்டு வருவதுமாகிய காரியங்கள் யாவும் நடைபெற்றுக்கொண்டு வந்தன—வருகின்றன. அழிவின்மையென்னும் தத்துவமும், அதனுடைய நம்பிக்கையும் மக்களுடைய மனதிலிருந்து அறவே மறைந்து போகுமேயானல், அப்பொழுது சுதந்திரம்வளர்ந்து, அறிவுவிருத்தியாகி, பல்வேறுசமயத்தினரும் ஒரே குடும்பத்தில் பிறந்தகுழந்தைகளைப்போல் ஒருவருக்கொருவர் ஒற்றுமையுடன் ஐக்கியப்பட்டு, எங்கும்-அதாவது உலகத்தின் எல்லாத் திசைகளிலும் மனிதனுடைய மனம் சென்று, அவனுடைய அறிவு அதிகரித்து, விருத்தியாகி, விசாலிக்கப்படுவதின் காரணமாய் உலக மக்களுடைய நல்லொழுக்க குணமானது அதிகரித்துக்கொண்டே வரும்.

மரணத்திற்குப் பின் ஓர் வாழ்க்கை உண்டா? அவ்வாறிருப்பதாகப் புலப்படவேயில்லை. மக்களுடைய சவங்களின்மீது நாம் மண்ணைத்தள்ளி, மூடி, அச்சவங்களைப் பிரேதக்குழிகளிலேயே விட்டு விட்டுவந்து விடுகின்றோம். அவைகளின் மாமிசங்கள் யாவும் பிரிக்கப்பட்டு, பூதசுத்தி செய்யப்படுகின்றன; அவைகளின் எலும்புகளோ மண்ணோடு மண்ணாகக்கலந்து, நாளடைவில் மறைந்து விடுகின்றன. சில வருஷங்கள் சென்றதும், நாம் அறிந்தும், நசித்தும், விசுவாசித்தும், காதலித்தும் வந்த உருவங்கள் யாவையும்யாம் இயற்கை

யானது தன்னுடன் இரண்டறக்கலந்து விடும்படியாகச்செய்து விடுகின்றது. இந்த உலகமாகிய நடன மேடையில் அவர்கள் நேற்று உயிருடனிருந்து வந்தார்கள்; இன்று நாமிருந்து கொண்டு வருகின்றோம்; நாளை வேறு பலர் இருந்து கொண்டு வருவார்கள். இயற்கையானது ஜனனத்திலிருந்து மரண பரியந்தம் அசைத்துக்கொண்டும், ஆட்டிக்கொண்டும் வருகின்றது. வாழ்க்கையின் வட்டத்தை ஜனனமும், மரணமும் சுழற்றிக்கொண்டே வருவதாகக் காணப்படுகின்றது.

எக்காரணத்தைக்கொண்டும் சாசுவதமாக நாம் உயிர்வாழவேண்டும்? நீடித்த வாழ்க்கையின் விருந்தை பங்கிட்டுக்கொள்ளுவதற்காக வேண்டி இயற்கையானது நம்மை மட்டும் ஏன் தேர்ந்தும், தெரிந்து மெடுக்க வேண்டும்? நாம் அழிவில்லாமலிருந்து வருவதற்காகவேண்டி, என்ன காரியத்தைச்சாதித்துத் தகுதி வாய்ந்தவர்களானோம்? நாம் அதை ஏன் விரும்பவேண்டும்? அதற்காக நாம் ஏன் பிரியப்படவேண்டும்? இயற்கையில் காணப்படக்கூடிய மற்றெல்லாவித உருவங்களும் அழிவில்லாமலும், நீடித்து மிருக்கக்கூடியதல்ல; அப்படியிருக்க, நீடித்த வாழ்வை அனுபவித்துக்கொண்டு வருவதற்காக நாம் மட்டும் நியமிக்கப்பட்டிருப்பதாக ஏன் நாம் கருதிக்கொள்ளவேண்டும்? எல்லாப்பொருள்களும் நாசமடைகின்றன, நாம் மட்டிலும் எதற்காக நிலைத்திருக்கவேண்டும்? நாம் வசிக்கும் படியான இந்த பூமியானது நாளடைவில் குளிர்ச்சியடைந்து, இறுகிய ஓர் பெரிய கற்பாரையாக மாறி, பூமியின் மீதுள்ள எல்லாப் பொருள்களும் நாசமாகி விடும்; இப்பொழுது வானத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் வெண்ணிலாவானது பூமாதேவியின் குளிர்ந்தும், அன்பில்லாமலுமிருக்கப்பட்ட மார்க்கத்தை வந்தடையும்; உஷ்ணத்தையும், வெப்பத்தையுமிப்பொழுது அளித்துக் கொண்

டிருக்கும்படியான சூரியன் தன்னுடைய வெப்பத்தையும், உஷ்ணத்தையுமிழந்து, யாதொருவித ஜீவராசியுமில்லாத மண்டலத்தில் சுழன்று கொண்டிருக்கும்; இரவும், பகலும் சரிசமமான இருநாளாகவே இருந்து வரும். வானத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கும்படியான நக்ஷத்திரக் கூட்டங்கள் யாவும், ஒவ்வொன்றாக இருண்டு கொண்டும் வரும். காலச்சக்கிரமாகிய எல்லையற்ற பெரிய சமுத்திரத்தில், பல லட்சக்கணக்கான வருடங்களாகிய பெரும் பெரும் அலைகள் தோன்றி, மறைந்து கொண்டேவந்து, மட்டில்லாத யுகங்கள் கழிந்து, சென்றதின் காரணமாக இந்தப் பூவுலகின் சாயலே மாற்றமடையவும் கூடும். சூரியர்களும் உலகங்களும் மாண்டு மடிந்து, குளிர்ந்து, தளர்ச்சியடைந்த இதர கோளங்களுடன் மோதுவதின் காரணமாக, ஒழுங்கான நெருப்புத்தூறல்களாக சிதறடிக்கப்பட்டு, சூரிய மண்டலங்களாக உற்பவித்து, பதினாயிரக்கணக்கான வருடங்களாக வெளிப்படுத்தப் படுவதின் மூலம் உஷ்ணத்தையும், வெப்பத்தையும் அளிக்கக்கூடிய சூரியர்களாகவும், செழிப்பான உலகங்களாகவும் மாறிவிடுகின்றன. அப்பொழுது புதிய புதிய நிலாக்கள் ஆகாய மண்டலங்களை அலங்கரித்துக்கொண்டு நிற்கும். மீண்டும், இரவும், பகலும் தோன்ற ஆரம்பிக்கும். இயற்கை வளர்ச்சியின் சட்டதிட்டப்படி பிராணிவர்க்கமும், தாவர வர்க்கமும் உயிர்ப்பிக்கப்பெற்று, மீண்டும் உலகமானது அகாலங்களால் நிறப்பப்படும். இவ்வாறாக இன்னும் மேற்கொண்டு பல லட்சக்கணக்கான வருடங்கள் செல்லலாம். அப்பொழுது காலச்சக்கரமும் சுழன்று, சுழன்று, முதன்முதலாகசுழல ஆரம்பித்த ஸ்தானத்தையேவந்தடையும். அத்தருணத்தில் மீண்டும் முன்போலவே இருளும், மரணமும் சம்பவிக்கும். அப்பொழுது மறைந்துபோகும் மண்டலங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் ற ) உன் —ாகக்கூடிய சத்தத்தின் எதிரொலியே

காலச்சக்கரத்தின் சுற்றுப்பிரகாரத்தில் தொனித்துக்கொண்டு வரும். அப்பொழுதுதான் நட்சத்திரக் கூட்டங்கள் ஆகாய மண்டலத்தில் தோன்றி,வரப்போகும் சூரியர்களைப்பற்றியும், செழிப்பான தாவர வர்க்கங்களால் சூழப்பட்டதும், மிருக வர்க்கங்கள் பல்வேறு உருவங்களுடன் உலாவிக்கொண்டு வரும்படியானதுமான இதர கிரகங்களும் தோன்றுவதற்கு முன் எச்சரிக்கையாக,—அதாவது குறிசொல்லுவதுபோல், பிரகாசிக்க ஆரம்பம் செய்யும். இவ்வாறுகவே தான் இந்த இயற்கையின் வேலையானது—சாசுவதமாக வேலைசெய்து கொண்டும், சதாகாலமும் நாசமாக்கிக்கொண்டும் வரும்படியான இந்த வேலையானது—இவ்வாறுகவேதான் சதாகாலமும் நடந்தேறிக்கொண்டே வரும். உருவமற்றவைகளிலிருந்து உருவங்கள் காணப்படுவதும்; தூசிகளிலிருந்து ஜீவன் பிறப்பதும்; மரணம் ஜீவியத்தை எங்கும் பீடித்துக்கொண்டு வருவதும்; கடைசியாக ஒழுங்கின்மையிலிருந்து சக்தி உண்டாகி, அது பலப்பட்டு, புதிய ஒழுங்குகளும், முறைமைகளும் அமைந்த ஓர் உலகம் தோன்றுவதும் முறையும் வழக்கமுமாகும்.

இயற்கையின் முடிவற்ற மாறுதலான இந்தப் பயங்கர நாடகமானது அகண்ட இவ்வுலக நாடக மேடையில் சாசுவதமாக நடிக்கப்பட்டுவரும் பொழுது நாம் எங்கே இருப்போம்? பற்பல சூரியர்களும் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்ளுவதனால் உண்டாகக்கூடிய உஷ்ணத்தாலும், வெப்பத்தாலும், நெறு நெறுப்பினாலும் நமது தேகங்களும், மூளைகளும், ஆயிரந் தடவைகளுக்கு மேலாகவே கரைக்கப்பட்டு, ஆவியாக மாறிக்கொண்டு வரும் பொழுது, பரிதாபப் படக் கூடியதும், நிர்வாணமாயிருக்கக் கூடியதும், போதிய பாதுகாப்புகளில்லாமலிருக்கக் கூடியது

மாகிய இந்த நமது ஆன்மாக்கள் மட்டும், தேய்ந்தும்—வளர்ந்தும் வரக்கூடிய நட்சத்திரக் கூட்டங்களினிடையே உள்ள எதாகிலும் ஓர் குளிர்ச்சியான இடத்திலிருந்துகொண்டு, மாறுதல்களால் தோன்றக்கூடிய காக்ஷிகளின் எல்லையற்ற அழகை, திருப்தி என்பதை அறிந்துகொள்ளாத கண்களைக்கொண்டு, உற்றுப் பார்த்துக்கொண்டேதானிருக்குமா? எங்குபார்த்தபோதிலும் இப் பரந்த உலகமானது நிர்மூலமாகிக்கொண்டேவரும்பொழுது, சாசுவதமாக நாம்மட்டும்ஜீவித்துக்கொண்டேதான் வருவோமா? சாசுவதமாகவே! அந்த எல்லையற்ற காலம் வரையிலும் ஜீவித்திருக்க யார்தான் ஆசைப்படுவார்கள்? நித்திய வாழ்க்கை! இப்பயங்கரமான வார்த்தையானது எப்பொருளைக் குறிக்கின்றதென்பது நமக்குத்தெரியவருமா? நித்தியவாழ்க்கையை அனுபவிப்பதாம்! உலகங்களின் மொத்த அறிவும் இப்பயங்கர எண்ணத்தின் அருத்தத்தில் லட்சத்தின் ஒரு பாகத்தையேனும் உணர்ந்துகொள்ளவேமுடியாது. அழிவில்லா ஜீவியம்! இதைச்சிந்தித்து, யோசனை செய்யுந்தோறும் நேரிடக்கூடிய ஆயாசத்தால் மனமானது தள்ளாடிப்போய், கீழே சாய்ந்துவிடுகின்றது. அழிவின்மையாம்! அமைதியான பிரேதக்குழியில், பங்கமின்றி நித்திரை செய்து, இளைப்பாறவிரும்பும் இந்தக்களைப்படைந்த ஆன்மாவானது, இந்த வெறும் எண்ணத்தையே நிராகரிக்கின்றது—வெறுக்கின்றது.

---

121634

## பகுத்தறிவு நூற்பதிப்புக்கழக வெளியீடுகள்.

| | | | |
|---|---|---|---|
| 1. பெண் ஏன் அடிமையானாள்? (ஈ. வெ. ரா.) | 0 | 5 | 0 |
| 2. முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை | 0 | 5 | 0 |
| 3. கடவுள். | 0 | 5 | 0 |
| 4. மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன? | 0 | 3 | 0 |
| 5. பாதிரியும், பெண்களும், பாவமன்னிப்பும் (இரண்டாம் பாகம் அச்சில்) | 0 | 3 | 0 |
| 6. பிரகிருதிவாதம் (ஈ. வெ. ரா.) | 0 | 3 | 0 |
| 7. மதமும், விஞ்ஞான சாஸ்திரமும் | 0 | 3 | 0 |
| 8. பிரபஞ்ச உற்பத்தி | 0 | 3 | 0 |
| 9. நான் ஏன் கிறிஸ்தவனல்ல? | 0 | 3 | 0 |
| 10. நான் சம்சயவாதி ஆனதேன்? | 0 | 3 | 0 |
| 11. மதம் என்றால் என்ன? | 0 | 2 | 0 |
| 12. குடி அரசுக் கலம்பகம் (ஈ. வெ. ரா.) | 0 | 6 | 0 |
| 13. மெஞ்ஞான முறையும், மூடநம்பிக்கையும் (2-ம் பாகம் அச்சில் M. சிங்காரவேலு B. A.,) | 0 | 6 | 0 |
| 14. நான் நஸ்திகன் ஏன்? (பகத்சிங்) | 0 | 3 | 0 |
| 15. பாதிரிகளின் பிரமச்சரிய லட்சணம் | 0 | 4 | 0 |
| 16. மரணத்திற்குப்பின் வாழ்க்கை உண்டா? | 0 | 4 | 0 |

கிடைக்குமிடம்:—

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் ஈரோடு.

# குடி அரசு பதிப்பக வெளியீடுகள்,

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | இந்தியாவின் குறைபாடுகள் | 0 | 8 | 0 |
| 2. | லெனினும், மதமும் | 0 | 4 | 0 |
| 3. | பொதுவுடமைத் தத்துவங்கள் | 0 | 3 | 0 |
| 4. | கடவுளும், பிரபஞ்சமும் | 0 | 4 | 0 |
| 5. | கைவல்யம் அல்லது கலைக்கியானம் | 0 | 8 | 0 |
| | (இது சுவாமி கைவல்யம் அவர்களால் எழுதப்பட்டது) | | | |
| 6. | இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம் | 0 | 4 | 0 |
| 7. | ,, அயோத்தியாகாண்டம் | 0 | 8 | 0 |
| 8. | ஞானசூரியன் | 0 | 4 | 0 |
| 9. | தர்ம பரிசை அல்லது புராண ஆபாசம் | 0 | 3 | 0 |
| 10. | மேயோ கூற்று மெய்யா? பொய்யா? | 0 | 3 | 0 |
| 11. | பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை | 0 | 4 | 0 |
| 12. | ஈ.வெ.ரா. சீர்திருத்தமகாநாட்டு உபன்யாசம் | 0 | 2 | 0 |
| 13. | அகத்தியர் ஆராய்ச்சி | 0 | 2 | 0 |
| 14. | இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு | 0 | 2 | 0 |
| 15. | சுயமரியாதைப்பாடல் | 0 | 2 | |
| 16. | கதர் மூட நம்பிக்கை (இங்கிலீஷ்) | 0 | 2 | |
| 17. | சுயமரியாதைத் தாலாட்டு | 0 | 2 | |
| 18. | பர்னார்ட்ஷா உபந்யாசம் | 0 | 1 | |
| 19. | சோஷியலிசம் | 0 | 2 | 0 |
| 20. | போல்ஷ்விக் முறை | 0 | 1 | 0 |
| 21. | ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம் | 0 | 0 | |
| 22. | கத்தோலிக்கர் வீண் கூச்சல் | 0 | 0 | |
| 23. | சமதர்ம உபந்யாசம் | 0 | 0 | |
| 24. | சோதிடப்புரட்டு | 0 | 2 | |

விலாசம்:— மனேஜர்,

குடி அரசு பதிப்பகம், ஈரோ